265

# ஜகன்மோகினி.

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்



## மாயப்ரபஞ்சம்

(தொடர்ச்சி)

5. துறவியின் பெருமை—சிறுமியின் நிலைமை
6. சுழல் காற்றில் சுழலும் உயிர்கள்
7. க்ஷாத்திர அம்பு—ஆத்திர நெருப்பு
8. உடைந்த இதயமும் ஊன்றிய அன்பும்
9. கடலுக்கும் காதலுக்கும் கரைதானுண்டோ?
10. வருந்திடும் உயிர்கள்—பிரிந்திடும் பறவை

OFFICE OF THE ...
13 JUL 1937
MADRAS

நீங்கள் கேட்டீர்களா?

உங்கள் ஆசிரியையின் சிறந்த இனிமையான ரிகார்டு.

G. E. 729 { மண்ணைப் பிறந்தாலும். ஆபோஹி, கைகவசி.
,, ,, பேகடா, வாசஸ்பதி.

விலை ரூ. 2—4—0 தான்

எல்லா கோலம்பியா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

5L
N37.14.6.
183005

மாயப்ரபஞ்சம்

அணா 2

## உயரிய சமூகப்படத்திற்கேற்ற நாவல்!

# சாமளநாதன்

உன்னத கதைப் போக்கு!
ஊன்றிய கருத்துகள்!
மனதை யுருக்கும் சம்பவங்கள்!
மதியூட்டும் நவீனம்!
பொருத்தமான பாடல்கள்!
இயற்கைக் காட்சிகள்!

*

நக்ஷத்திரப் படமாய்
வெளிவரக்கூடியது.

!

உண்மை
வாழ்க்கைச்
சித்திரம்.

வை. மு. கோ.
எழுதியது.

*

உடனே
படியுங்கள்.

விலை ரூ. 2.

தமிழுலகம்
போற்றும் கதை

!

சமூக சீர்திருத்தமே
இதன் நோக்கம்.

இது நம் சமூகத்தில் அறிவு
வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும்
ஆற்றிவரும் தொண்டை
உணர்ந்தவர்கள், இக்கதை என்று
பேசும் படமாக வெளிவந்து
இன்னும் பன்மடங்கு சேவை செய்யும்
என ஏங்குகிறார்கள்.

*

நீங்கள் எத்தனை முறை படித்து இன்புற்றீர்கள்?

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JUL 1937
MADRAS

ஸ்ரீ:

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியேன்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீராகவ கவி.



| மலர் | ஈச்வர ஞூ வைகாசி மீ | இதழ் |
|---|---|---|
| 14 | JUNE 1937. | 6 |



"வழிமறைத் தேன்மனத்தில் பாசம் என்றேநு
மாசுணம் படுத்திருக்குதே (வ)

அனுபல்லவி

அழியாவுன்னுமத்தை அனவாதமும் சேப்ப
ஆசிகூறயோ ! பாசம் தீராயோ ! கேசவா !
உன்னேசம் வைத்து (வ)

சரணம்.

உன்னருள் பிறந்திட்டால் இன்னல்கள்
விளையுமோ ! பன்னக சயனனே !
இன்னும் மனமில்லையோ ! பின்னும் தாமதமேனோ !
உன்றன் பதமதை என்றன் மனமதில்
சந்ததமு நீ உவந்தளிப்பாய்." (வ)

—வை. மு. கோ.

183005
601 C.R.

# கடவுள் ஒருவரே

"திரு நபி ஜயந்தியில் கலந்துகொள்ள எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. நானாவித மதங்களின் முக்ய கொள்கைகளில் வித்யாசமேயில்லை. மதங்கள் யாவும் ஒரே கடவுளிடமிருந்து தான் வந்தன. கடவுளையடைய அநேக வழிகள் இருக்கின்றன. அறியாமையினால் ஜனங்கள் பல்வேறு மதங்களிடையே வித்யாசம் கற்பித்துத் தங்களுக்குள்ளே சண்டை போட்டுக்கொள்கின்றனர். என்ன பெயரிட்டாலும் ஒரே ஒரு கடவுள்தான் உண்டு.

திருநபி மதத்தில்தான் வட்டிக்குப் பணம் கொடுக்கக்கூடாதென்ற கொள்கை இருக்கிறது. இது வேறு எந்த மதத்திலுமில்லை. இதுமட்டும் கடுமையான அனுஷ்டானத்திற்கு கொண்டுவரப்பட்டால் ஒருவர் உழைப்பில் ஒருவர் வாழ்வதென்பது முடியாது. எல்லோரும் அவரவர்கள் ஜீவனத்திற்கு வேலை செய்தாகவேண்டும். முஸ்லிம்களிடையே பூர்ண சமத்வம் இருக்கிறது, ஆரம்ப முதலே இது அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

திரு நபி போதனைகளை இவ்வளவு தூரம் போற்றுகிற நான் என் இஸ்லாத்தில் சேரவில்லையென்று கேட்கலாம். இது அவசியமேயில்லை.

ஒருவர் எந்த மதத்தில் பிறந்தாரோ அந்த மதத்திலேயே மோக்ஷ சாதனத்தை யடைய போதுமான மார்க்க மிருக்கிறது.

உதாரணமாக, கடவுள் சிருஷ்டித்த அநேக புஷ்பங்களில் ஒன்றை பொறுக்கி யெடுத்து மற்றவைகளைப் புறக்கணிக்க முடியுமோ? ஒவ்வொரு மலரும் அதனதன் வழியில் அழகுதான். இதே மாதிரி கடவுள் அநேக மதங்கள் சிருஷ்டித்திருக்கிறார். மலர்களில் நிறம், மணம் வித்யாசமாக இருக்கலாம்; ஆனால் அவைகளிடையே விரோத மிருக்க நியாய மில்லையே. மலர்களைச் சுற்றி முட்கள் வளர்வது போல மதத்தைச் சுற்றிக் குரோதம் வளர்ந்தது. ஒரு மதத்தினர் இன்னொருவரை கண்டித்துத் தாக்க வாரம்பித்தனர் இந்த நானாவித வாசனையும் நிறமுமுள்ள மலர்கள் எப்படி ஒரு அழகான மலர் மாலையாகிறதோ அதேபோல அநேக மதங்களுடைய இந்தியாவும் அமைதியாகவும், மதஸ்தர்களிடையே அன்பு பெருகியும் வாழலாம். எல்லா ஜனங்களும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்ற அவசியமும் இல்லை. அதனால்தான் நாங்கள் திருநபி திருவாக்யத்தைப் போற்றுகிறோம். நான் என் மதத்திலேயே இருக்க திருப்தியுடையவனாக இருக்கிறேன்"

ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசாரியர்.

# உதிர்ந்த மணிகள்

### பலாத்காரத்தில் நம்பிக்கை

நம்மிடம் போதிய படையில்லையாயின் உலகிலுள்ள சர்வாதிகாரிகள் ஜனநாயக முறையை வீழ்த்தி விடுவர். —லண்டன் பிஷப்.

### தாய் பாஷையின் அவசியம்

2. நமது ஜீவனத்துக்கும் நாம் செய்யவேண்டிய சேவைக்கும் அவசியமானது தாய் பாஷை. —ஸி. ராஜகோபாலாசாரியர்.

### ஆசிரியர் கடமை

3. உங்களில் ஆசிரியர்களாகிறவர்கள் எளியவர்களது கஷ்டங்களை உங்களது கிரந்தங்களில் பிரதிபிம்பித்துக் காட்டுங்கள். வாழ்க்கை இயக்கங்களில் கலந்து கொள்ளுங்கள். அப்பொழுதுதான் கலைகள் வாழும். —சம்பூரணனந்தர்.

### வித்தியாசமான கோ ் கை ஏன்?

4. முஸ்லீம்களுடன் ஒத்துழைத்து அவர்களுக்கு உதவி செய்யும் ஹிந்துக்கள் ஹிந்துவில்லாமல் போவதாக இந் நாட்டில் கருதப்படவில்லை. ஆனல், ஹிந்துக்களுடன் முஸ்லீம்கள் ஒத்துழைத்தால் அல்லது அவர்களுக்கு உதவி செய்தால் அவர்கள் முஸ்லீம்களில்லாமல் போய்விடுவதாகச் சில முஸ்லீம்கள் மதிக்கின்றனர். —ஐ. ஏ. கே. பஸ்லுல் ஹக்.

### வாஸ்தவமாகவா?

5. இந்தியரில் திறமை வாய்ந்த பலர் சமூக பொருளாதார முறைகளைச் சீர்திருத்தி யமைக்கவும் பரிபூர்ண சுதந்திரத்தை ஸ்தாபிக்கவும்' சர்வாதிகாரத்துவ ஆட்சி அவசியமெனக் கருதுகின்றனர்.

—"மாஞ்சேஸ்டர் கார்டியன்"

### காரணம் சரியானதா?

6. அனுபவம் பெற இந்திருக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை. பிறகு அனுபவமில்லாததால் அவர்களை நியமிப்பதற்கில்லை யெனக் கூறப்பட்டு வருகிறது. —புலர்பாய்.

### தலைமை வகிக்கக் கூடியவர்

7. தன்னடக்க முள்ளவன் மலை புரளினும் நிலை கலங்காமலிருப்பான். அன்னவன் தான் உலகிற்கு வழி காட்ட முடியும்.

—திரு. ராகவாசாரியர்.

### நம்பிக்கையின் முக்கியம்

8. நீங்கள் கோவிலுக்குப் போக வேண்டும். ஆனல் மூட நம்பிக்கைக்கு உறைவிடமாகக் கருதி அங்கு போகக்கூடாது. நீங்கள் கோயிலில் நம்பிக்கை வைத்துச் சென்றால் நீங்கள் அதிலிருந்து திரும்பும் போது அதிகத் தூய்மையுடனும் அதிகமான தெய்வ நம்பிக்கையுடனும் திரும்புவீர்கள். —மகாத்மா காந்தி.

### தேர்தல் வெற்றி எதற்கு?

9. தேர்தலில் நாம் வெற்றி பெறுவதானது அடுத்தாற்போலுள்ள இன்னும் கடுமையான போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவதற்கு முதல் படியாகும். —ராஷ்டிரபதி ஜவஹர்.

## பிஞமி மந்திரிகளால் பயனில்லை

நமது யோசனை இதுவாகும். ஆறு மாகாணங்களில் சட்ட சபைகள் கால தாமதமின்றி உடனே கூட்டப்படவேண்டும். இடைக்கால மந்திரிகளாகச் சிலர் வந்திருக்கிறார்களே அவர்களுக்கு ஏதாவது சௌகர்யமாக நடக்கவேண்டாமா வென்று கேட்பது ஒரு கேள்விதான். ஆனால் அதை கவனிப்பதற்கில்லை.

எப்படியானாலும் சட்ட சபைகளை செப்டம்பர் மாதத்தில் கூட்டித் தானே யாகவேண்டும். அதற்கு முந்தி அல்ப ஆயுள் கொண்ட இந்த இடைக்கால மந்திரி சபையால் என்ன சாதிக்க முடியும்?

எந்தப் பெரிய திட்டத்தையும் நிறைவேற்ற லாயக்கற்றவை இந்த மந்திரி சபைகள்.

ஆகவே கவர்னர்களுக்கு வேறு துறையே யில்லை. அக்டோபருக்கு முந்தி சட்டசபைகளைக் கூட்டுவதேன்ற ஒரு வழிதானிருக்கிறது,

காங்கிரஸ்காரர் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால் கவர்னருக்கு 2 மார்க்கங்களுண்டு. முதலில் மறு தேர்தலுக்கு உத்தரவிடலாம். கடைசியாக அரசியல் திட்டத்தையே ரத்து செய்யலாம். "ஸ்டேட்ஸ்மன்"

## பிஞமி மந்திரிகள்

சுய நலத்திற்காகத் தேச நலத்தைத் தியாகஞ் செய்த வீரர்களைப் பற்றி நம் தேச சரித்திரத்தில் என்ன எழுதப்போகிறார்கள்? அத்தகைய வீரர்களை நம் தேசத்தினர் என்றும் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாதலால் அவர்களது நாமதேயங்களைக் கீழே காண்பீர்களாக:—

### மத்திய மாகாணம்

1. இ. ராகவேந்திர ராவ்
2. கபர்தே
3. தர்மா ராவ் புஜங்கராவ்
4. ஸ்ரீ. ரிஜ்வி

### பீஹார்

1. M. யூனஸ்
2. குமார் அஜித்ப்ரஸாத்ஸிங் தேவ்
3. குருசகாய் வால்
4. நவாப் அப்துல் வாகாப்கான்

### ஒரிஸா

1. பர்லாகிமிடி ராஜா
2. M. G. பட்நாயக்
3. லதீப் ரஹ்மான்

### எல்லைப்புறம்

1. ஸர். அப்துல் கயூம்கான்
2. ராய்பகதூர் மேகர் சந்த் கன்ன
3. சாதுல்லா கான்

### பம்பாய்

1. ஸர். ஆர். பி. கூப்பர்
2. ஸர். எஸ். டி. கம்பினி
3. ஹூஸேனலி ரகமதுல்லா
4. ஜம்னுதாஸ் மேத்தா

### சென்னை

1. ஸர். கே. வி. ரெட்டி
2. ஏ. டி. பன்னீர் செல்வம்
3. எம். ஸி. ராஜா
4. ஆர். எம். பாலாத்
5. பி. கலிபுல்லா
6. குமாரராஜா முத்தய்ய செட்டியார்

### ஐக்கிய மாகாணம்

1. சத்தாரி நவாப்
2. ஸர். J. P. ஸ்ரீவாத்ஸவா
3. ஸாலீம்பூர் ராஜா
4. நவாப் ஸர் மகமத் யூஸப்
5. திர்வா ராஜா
6. ராஜா மகேச்வர் தயாள்சேத்
7. விஜயநகரம் மகராஜ்குமார்

# பத்திரிகை விமர்சனம்.

## ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

[பத்திராதிபர் :—ஸ்ரீ. உ. வே. வடகரை ராமாநுஜாசாரியர் ஸ்வாமி. 24. சந்திரப்ப முதலி தெருவு ஜி. டி. சென்னை. வருஷ சந்தா ரூ $1\frac{1}{2}$ ; தனிப்ரதி அணு 3.]

இந்த மாதப் பத்திரிகையின் பெயரிலிருந்தே வைஷ்ணவ (ராமாநுஜ) ஸித்தாந்தத்தைப் பற்றிய விஷயங்களடங்கிய தென்பது தெளிவாகின்றது. ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாயத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்களும், அரை குறையாகத் தெரிந்தவர்களும் இதன் மூலமாகப் பல அரிய விஷயங்களை அறிந்து அநுபவிக்க முடியும். வைஷ்ணவ மதத்தில் தீவிரமான பற்றுதலுடைய பல வித்வான்கள் இதற்கு எழுதி வருவது மிகவும் போற்றத் தக்கது. இது எல்லா வைஷ்ணவ அபிமானிகளுக்கும் அஸ்த பூஷணமாக விளங்க வேண்டியது அவசியமாகும். தமிழ் ஸம்ஸ்க்ருதம் இரண்டிலும் நல்ல ஞானமுள்ளவர்களே இதிலுள்ள விஷயங்களை கிரகிக்க முடியுமாதலால், வட கலையின் வாசனையை மறந்து தென் கலையில் தேர்ச்சியை யடையாது மேற்கலையில் மூழ்கி த்ரிசங்குவாகத் தவிக்கும் பாமர மக்களையும் நல்வழிப் படுத்திக் கரை சேர்வதற்காகத் தக்க எளிய தமிழ் நடையில் சில கட்டுரைகளையும் சேர்ப்பார்களென்று நம்புகிறோம்.

## சில அபூர்வ பிரசவங்கள்

ஒரே பிரஸவத்தில் 5, 6 குழந்தைகள் பிறந்திருக்கின்றன. ஆனால் 8 குழந்தைகள் பிறந்திருப்பது இதுதான் முதல் தடவை.

**ஒரு ஏழை சீன மெகானிக்கின் மனைவி, ஒரே பிரஸவத்தில் 7 ஆணும் 1 பெண்ணுமாக 8 குழந்தைகளைப் பெற்றிருக்கிறாள்.**

இச் செய்தி "டை ஸ்டண்டே" என்ற ஒரு பிரபல வைத்திய பத்திரிகையில் பிரகாசமாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

எட்டு குழந்தைகளும் சௌக்யமாகவும் திடகாத்திரர்களாயுமிருக்கின்றன.

ஸ்காட்லாந்தில் ஒரு ஸ்த்ரீ 14 முறை கருத் தரித்ததில், 11 இரட்டைகளை ஈன்றாள். 44 குழந்தைகளைப் பெற்ற மற்றொரு ஸ்த்ரீக்கு 13 தடவைகளில் ஜோடிகள் பிறந்தன; 6 தடவை மும்மூன்றாக வந்தன. ரஷ்யாவில் 21 கர்ப்பமான ஒரு ஸ்திரீக்கு பிறந்த குழந்தைகள் 77.

அமெரிக்காவில் ஒரு நீக்ரோவுக்கு இரண்டாவது பிரசவத்தில் இரட்டை, மூன்றாவது பிரசவத்தில் 4, 6 வது பிரசவத்தில் 6 பிறந்தன.

புள்ளி விவரங்களின்படி. 10 லக்ஷம் பிரஸவங்களில் 12,000 இரட்டைகள், 140 மும்மூன்று, ஒன்று தான் நான்கு வீதாசாரம் காணப்படுகிறது. 5, 6 பிறப்பது மிகவும் அரிதாய் விட்டது. (தினமணி)

## பர்மா செட்டிமார்களுக்கு ஸ்ரீ ஜவஹரின் உபதேசம்

"முதலாளி வகுப்பை நீங்கள் சார்ந்தவர்களாயிருந்தாலும், மாறுதல்களைக் கண்டு அஞ்சுகின்றீர்கள். வரப்போகிற மாறுதலில் நீங்கள் தியாகம் செய்யும்படி நேரிடும். அதற்குத் தகுந்தாற்போல் நீங்கள் உங்கள் நிலையைப் பொருத்திக் கொள்ளவேண்டும்.

தொழிலாளிகளின் நிலைமையை முதலாளிகளாகிய நீங்கள் அறியவேண்டும். அவர்களின் கஷ்டங்களிற் சிரத்தை காட்டவேண்டும். வரப்போகிற மாறுதல்களைக் குறித்து நீங்கள் அஞ்சுதல் கூடாது. அவற்றை எதிர்த்து நிற்கவேண்டும். உலக நிலைமைகளின் மாறுதலுக் கேற்றாற்போல் செட்டிமார்கள் நடந்து கொள்ளவேண்டும். தொழிலாளர் இயக்கத்தையும், உலக மாறுதல் இயக்கத்தையும் நீங்கள் எதிர்க்கக் கூடாது. உங்களுக்குக் கொஞ்சம் நஷ்ட மேற்படலாம். உங்கள் மூலதனம் அழியாது. நீங்கள் காங்கிரஸ் இயக்கத்தில் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டுவது நியாயமாகும்."

## இதாலியில் பிரஜோற்பத்தி விருத்தி

இதாலியில் பிரஜோத்பத்தி அதிகரிப்பதற்காக செய்யப்படும் பல காரியங்களில் இப்போது புதிதாக ஒரு திட்டம் அமுலுக்கு வரப்போகிறது.

26 வயதுக்கு முன்னால் விவாகம் செய்துகொள்ள விரும்புவோருக்கு 1000 முதல் 3000 லிரா வரையில் சர்க்கார் கடன் கொடுக்கும். ஒரு குழந்தை பிறந்தால் கடனில் 10% வஜா; இப்படி 40% வரை வஜா செய்யப்படும்.

சர்க்கார் உத்யோகஸ்தரின் சம்பளத்தில் வருஷம் தோறும் சம்பள உயர்வு கொடுக்கும் முறை ரத்தாகும். அதற்குப் பதிலாக உத்யோகஸ்தருக்கு ஒவ்வொரு குழந்தை பிறக்கும்போதும் சம்பளம் உயர்த்தப்படும்.

## காதலுக்கு முடி பலியாகிறது

ருமேனியாவின் பட்டத்து இளவரசர் நிக்கலஸ், தன் பாத்தியதைகளை யெல்லாம் துறந்துவிட்டு நாட்டிலிருந்து வெளியேறுகிறார்.

1931ல் அவர் இரகசியமாக ஸாவீனு என்ற அழகியை மணந்து கொண்டார். அவர் ஒரு ரஷ்ய ஸ்தானீகரின் மாஜி மனைவி. இந்த விவாகத்தின் சந்ததிகளுக்கு ராஜ்யபார உரிமை வேண்டியதில்லை என்ற நோக்கத்துடனேயே அவர் விவாகம் செய்துகொண்டது.

இந்த விவாகத்தை ரத்து செய்து விடவேண்டு மென்று மந்திரி சபை கேட்டது. அதை அவர் மறுத்துவிட்டார். தன் ராஜரீக உரிமைகளைத் துறந்துவிட்டார். தேசத்திலிருந்து வெளியேறப் போகிறார்.

# கவிதா மண்டலம்

## முடி சூட்டு விழா வாழ்த்துப் பா

மலரவன் படைத்த மானுல கிதனுள்
நலமுற வொளிறும் நாடுகள் பலவே
பற்பல நாட்டின் பண்பெலாம் ஒன்றாய்ச்
சொற்பல நாட்டுந் துணையதித் தேயம்
அந்தணர் அரசர் அரியவா ணிகரும்

தந்தந் தொழிலைத் தடையற இயற்றிப்
பழுதறு துணையாப் பயிலுங் கடைசியர்
நால்வகை வருணமும் நயந்து வாழும்
பால்வகை யுடையதிப் பாரத கண்டமே
இத்தகை நாட்டிற்(கு) இயம்பொணா இறைமை

உத்தம வினையின் ஒழுகிய பயனால்
பெற்று விளங்கும் பெரியோன் ஜார்ஜுவின்
பொற்ற மகுடம் புனைநாள் ஆதலின்
தம்பால் மேவித் தண்டேன் பருகும்
நம்பாச் செல்லும் நளிவண் டினையே

அன்பொடு விரும்பு மலர்கள் போன்ற
இன்பின ராகிய இந்தியர் நாமும்
வம்பு மலர்ச்சியும் வழங்கும் வண்டினை
அன்னவ னாயுள் அரும்புகழ் வெற்றி
மன்னுற நாளும் மகிழ்ந்து
வாழ்த்துவம் பல்கால் மண்மிசை தானே!

### வெண்பா

வேந்தன் நிலமாள வேண்டின் தனக்குரிய
ஏந்துபடைப் பயிற்சி எய்தலொடு—சாந்த
நடையுடைய னாகியே நானிலத்தைக் காக்கக்
கொடியவற்றை நீக்கல் குணம்.

—வீராகவ கவி

வெளி வந்துவிட்டது! விற்பனைக்குத் தயார்!!

# மந்தாகினி

அல்லது

## கிராமத் தொண்டு

ஸ்ரீமான் M. C. ஸ்ரீனிவாஸன் M. A. B. L.

எழுதியது

விலை அணா. 8 தபாற் செலவு அணா 1

முன் பண மனுப்பவும். வி. பி. கிடையாது

வத்ஸா கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

---

**ஸரஸராஜன்** (2-ம் பதிப்பு) அணா. 4

சில்வானம் விற்றுப் புருஷருக்குத் தெரியாமல் பணம் சேர்த்து, நகைப்பித்து பிடித்துத் தறிதலைகளாய்த் திரியும் பெண்களின் கதி என்னவாகும் என்பதை நன்கு விளக்கிக் காட்டும் சிறிய நாவல்.

**சுகுண பூஷணம்** (2-ம் பதிப்பு) அணா. 4

உத்தமத் தந்தையின் புத்திர வாஞ்சையும், பணப் பேராசை பிடித்து, அற்ப குணமுடைய உடன் பிறந்தாளின் அட்காஸமும், பொறுமைக்குப் பெருமை என்றும் குறையாது என்றபடி சுகுணவதியின் சரிதமும், திடுக்கிடும் ஆச்சரிய சம்பவங்களும் நிறைந்தது.

**அம்ருததாரா** (2-ம் பதிப்பு) அணா. 4.

இதுவரையில் நீங்கள் படித்திராத அநுபவமும் அதியாச்சரியமும், நீதியும், திடுக்கிடும் சம்பவங்களும், கனவிலும் கருத முடியாத அற்புதச் செய்கைகளும் கூடியது.


### பரிசுகளின் விவரம்

1937 ஞு மே மீ 20 தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு | ரூ. | சந்தா ந. | |
|---|---|---|---|
| 1 | 5 | N. 144. | Mr. N. Narayanaswamy, Myitkyau |
| 2 | 5 | T. 109. | ,, M. Thiagarajan, Tuticorin |

ஜூன் மாதம் 20ந் தேதிக்குள் சந்தாவை அனுப்புவோரது நம்பர்களையும் குலுக்கிப்போட்டு 2 சீட்டுகளை எடுத்து, ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 மதிப்புள்ள புத்தகங்கள் இனாமாகக் கொடுக்கப்படும். மானேஜர்

## 5-வது அதிகாரம்

### துறவியின் பெருமை—சிறுமியின் நிலைமை

மனம் வாடி வருந்தி தத்தளிக்கும் சன்னியாசினியின் நிலைமையைக் கூறவேண்டுமோ! பசியோடு தவிக்கும் ஏழைகளைப் பார்க்கப் பார்க்க மனவேதனை அதிகரிக்கின்றதுடன் பொது ஜனங்களின் கொடிய வார்த்தைகள் அவளுடைய ஆவியையே உறிஞ்சுவதுபோ லாய்விட்டது. "கிருஷ்ணா! கிருஷ்ணா! ஏ பரந்தாமா! பக்த சுதாமனின் ஏழ்மையைத் தீர்த்த நீ...பாண்டவர்களைப் பக்ஷமுடன் காத்த நீ...அக்ஷயபாத்திர மகிமையினால் பக்தர்களின் பசியை ஆற்றிய நீ...இப்போது உன் சரணமே கதியாயுள்ள பேதையைக் காப்பது பாரமா!...

சோதனைகள் செய்யவேண்டாம் கண்ணா! உந்தன்
பாதமே யாதார மன்றோ கண்ணா...
பூதலத்தில் உன்னையன்றி வாதனைத் தீர்ப்பாருமுண்டோ!
கண்ணா! மணிவண்ணா!
சண்டாள ஜென்மங் கொண்டேன் கண்ணா! என்னைக்
கண்டோர் பழிப்பால் நொந்தேன் கண்ணா!...
மண்டல மளந்த மாயா! தொண்டர்க்சன்னமளிப்பது
வஞ்சமோ அன்றி பஞ்சமோ!

என்று மனமுருகிப் பாடி பஜித்து வேண்டுகிறாள். மணியோ ஏறிக் கொண்டே போகிறது. 12 அடித்துவிட்டது. உச்சி வேளை வெய்யலில் ஏழை மக்கள் பசியுடன் தவிக்கிறார்கள். ஏழைகளுக்கு இந்த அம்மாளின் தவிப்பு என்ன தெரியும்?...சாப்பாடு வரும் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். அந்த ஏழை மக்களின் வயிற்றில் ஈரம் விழுந்தால்தான் தானும் அன்று தீர்த்த

பானம் செய்வது, இல்லையேல் பட்டினி கிடந்தே சாவது என்ற தீர்மானத்துடன் தவிக்கிருள்.

மணி பகல் ஒன்ருகிவிட்டது. அந்த ஊரில், இச் சன்யாசினி இருக்கும் தெருவுக்குப் பக்கத்துத் தெருவில் தடபுடலான பெரிய பணக்கார வீட்டுக் கல்யாணம் அமர்க்களப்படுகிறது. அன்று 12 மணிக்கு முகூர்த்தம் வைத்திருந்தது. முகூர்த்தத்திற்கு முன்பு 11 மணிக்கே கல்யாண வீட்டாரின் சொந்தக்காரக் கிழவியொருத்தி திடீரென்று மாரடைப்பினுல் இறந்துவிட்டதால் கல்யாணம் நின்று போய் அடுத்த முகூர்த்தத்தில் செய்யும்படியாகிவிட்டது.

உள்ளே செய்திருந்த ஏராளமான கல்யாணச் சாப்பாடு முற்றும் இனி ப்ரேத அடக்கத்துக்குள் ஊசிப் பாழாகிவிடும் என்றதனுல் கல்யாணத்தின் சொந்தக்காரர் அதை என்ன செய்வதென்று யோசித்தார். அதற்குள் இங்கு சன்யாசினியின் பரிதவிப்பும், சாமான்கள் களவு போய்விட்டதும், ஏழைகள் பசியால் வாடுவதும் அவர் காதுக்கு எட்டியது.

உடனே தன் காரியஸ்தரை நோக்கி அந்த ஏழைகள் அத்தனை பேருக்கும் சாப்பாடு போட்டுவிடும்படி ஆக்ஞாபித்துவிட்டார். காரியஸ்தர் சாப்பாட்டு வகையராக்களை அப்படியே ஒரு பெரிய வண்டியில் வைத்துக்கொண்டு இந்த மண்டபத்திற்கு வந்து சன்னியாசினியிடத்தில் நடந்ததைக் கூறி அந்த சாப்பாட்டை ஏழைகளுக்குப் போட்டுவிடும்படித் தெரிவித்தார்.

இந்த அதியாச்சரியமான சம்பவத்தைக் கண்ட சன்யாசினியின் ஆநந்தம் கரை புரண்டது. "கிருஷ்ணு! கிருஷ்ணு!" என்று பக்திப் பரவசமாக விழுந்து நமஸ்கரித்தாள். ஆநந்தக் கூத்தாடினுள். அகமகிழ்ந்தாள், மெய்சிலிர்த்து இரு கை கூப்பிக் கண்மாரி பொழிந்து தம்பித்து நின்ருள். பிறகு தன் சகாக்களை வைத்துக் கொண்டு அவளே நேரில் அத்தனை பரதேசிகளுக்கும் இலை போட்டு கையாற நிறைய நிறையப் பரிமாறி அவர்கள் வயிறு புடைக்க "போதும், போதும்" என்று கூறும் வரையில் உபசரித்தாள்.

இந்த அறுசுவை உண்டிகளைக் கண்ணாலும் பார்த்தறியாத பிச்சைக்காரர்கள் பரம சந்தோஷத்துடன் சன்யாசினியை வாழ்த்திக்கொண்டே ஆநந்தமாக உண்டு பசியாறினார்கள். இங்கு நடந்த சகல விஷயங்களையும் பற்றி வம்பு பேசி வேடிக்கை பார்க்கும் கூட்டத்தினர்கூட இந்த சன்யாசினிக்கு ஏற்பட்ட சோதனையையும் உடனே அதற் குண்டான நிவர்த்தியையும் கண்டு பரம ஆச்சரியப்பட்டார்கள். எனினும் நல்ல பாம்பின் பெயர் நல்லதுதான், அதன் தலையில் விலையிலாத மாணிக்கந்தான் வியக்கும் வகையிலிருக்கிறது; ஆனால் கொடிய விஷம் மாறி அமிருதமாகிவிடுமா? அதுதானில்லை.

"இவள் சாதாரண சன்யாசியல்ல. செப்பிடு வித்தைக்காரியோ! மந்திரக்காரியோ! மாயக்காரியோ! தெரியவில்லை. இல்லாவிட்டால் இம் மாதிரி கல்யாண வீட்டில் இழவு விழுவானே...இவள் கோரிக்கை ஈடேறுவானே...ஏதோ தந்திரமிருக்கிறது" என்றார்கள்.

"கோடித்துக் கோடித்து அருமையாக ஏற்பாடு செய்திருந்த கல்யாணம் இப்படி அப சகுனம்போல் நின்றுவிட்டதே! இதனால் என்ன தீங்கு நேருமோ, அன்றி என்னவாகுமோ! பெண்ணின் துரதிர்ஷ்டத்தினால் இந்த அப சகுனம் ஏற்பட்டதென்பதா! பிள்ளையினால் ஏற்பட்டதென்பதா! என்னவென்று சொல்வது?" என்று கல்யாண வீட்டார் இருதரத்தினர் மனத்திலும் வேலை செய்கிறது. கல்யாணப் பெண்ணோ கண்ணீர் உதிர்த்துக் கலங்குகிறாள். இம்மாதிரி அசம்பாவிதம் நடந்துவிட்டதால் "இனி இந்த இடத்தில் விவாகம் நடக்காது மாற்றிவிடுவார்களோ?" என்ற விசனம் உண்டாகி விட்டது...

எல்லோரும் குழம்பிப்போய் தத்தளிக்கையில், அத்தனை பெயர்களும் கண்டு ப்ரமிக்கும் வண்ணம், செத்துக் கிடந்த கிழவியின் கால் கட்டை விரல் கிடுகிடு என்று ஆடியது கண்டு திடுக்கிட்டார்கள். பின்னும் அரை விநாடிக்குள் தேகம் பூராவும் அசைந்து நடுங்கியது. அடுத்த நிமிடமே கிழவி "தாகம்" என்று கையைக் காட்டினாள். ஒரு கோப்பை தண்ணீரைக் குடித்ததும் சற்று நேரத்திற்கெல்லாம் கண்ணைத் திறந்து பார்த்து மெல்லிய குரலில் "முகூர்த்

தம் ஆய்விட்டதா!......தம்பதிகள் எங்கே?.......உட்கார்ந்திருக்கும் போது திடீரென்று மாரடைத்து மயக்கமாகிவிட்டேன்...முகூர்த் தம் பார்க்காது போய்விட்டேனே?''... என்றாள்

இந்த ஆச்சரியத்தைக் கண்டு ஜனங்கள் அத்தனை பேரும் திகைத்து ப்ரமித்துவிட்டார்கள். கல்யாண தம்பதிகளின் சந்தோ ஷம் கூறத்திறமில்லை, அச் சமயம் மனிதர்களின் நிலைமையை வர் ணிக்கவே முடியவில்லை. பிரிக்க ஆரம்பித்த பந்தல் உடனே போடப் பட்டது....அடுத்த லக்னமும் நிரம்பவும் நன்றாக இருப்பதால் அதில் முகூர்த்தத்தை நடத்திவிடலாமென்று புரோகிதர் சொன் னதை எல்லோரும் ஆமோதித்தார்கள். அத்தனை ஏழைகளும் உண்டு பசியாறிய ஆநந்தத்தைப்போல் இந்த கல்யாண வீட்டின் ஆநந்தம் பன்மடங்கு பெருகிவிட்டது. 'எல்லாம் ஈசனின் சோத னையும் லீலையுந்தான்' என்று ஆரவாரித்தார்கள். முகூர்த்தமும் நடந்துவிட்டது. கிழவியின் இரண்டு மணி கால மூச்சடைக்கும் வாயுவு இத்தனை விபரீதத்தையும், ஏழைகளுக்கு பெரும் நன்மை யையும் உண்டாக்கினது.

கிழவி பிழைத்துவிட்டாள்; விவாகமும் நடந்துவிட்டது என்ற விஷயம் ஒரு நொடியில் ஊரெங்கும் பரவிய உடனே பொது ஜனங்களின் ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. "இந்த சம்பவத் தைக் கண்ணன்தான் உண்டாக்கி சன்யாசினியின் பரிசுத்த பக்தி யையும், தூய்மையான இதயத்தையும் பொது மக்களுக்குக் காட்டி னார்போலும்'' என்று கொண்டாடினார்கள்.

ஏற்கெனவே சன்யாசியினிடத்திலுள்ள நம்பிக்கையும் மதிப் பும் இன்னும் பன் மடங்கு ஊர்ஜிதமாகி அதிகரித்து "இவள் சாதா ரண மனுஷி இல்லை. ஏதோ தெய்வாம்சம் பெற்றவள்தான். இல்லை யேல் இம் மாதிரி ஆச்சரிய சம்பவம் கூட நடக்குமோ! இவள் சில வேஷக்காரப் போலிச் சாமியாரைப் போன்றவளல்ல. உண்மையான இதய சுத்தி யுடைய உத்தம சன்யாசி என்பதற்கு ஆக்ஷேபணையே இல்லை.

"இந்தம்மாளின் உபதேசத்தினாலும் செய்கையினாலும் நாஸ்தி கருக்கும் நம்பிக்கை உண்டாகி, ஆஸ்திகம் உதயமாகி நல்ல குண

மும் ஒழுக்கமும் ஏற்படும். அடங்காப் பெண்களும் இவளது அரிய மொழிகளால் நல்ல குணத்தைப் பெறுவார்கள்.'' என்ற பெரும் நம்பிக்கை பல பெரிய புருஷர்களுக்கெல்லாம் உண்டாகிவிட்டதால் அனேகம் பேர் (கோயிலுக்கு வராதவர்களெல்லாம்) இந்தம்மாள் மூலமாகக் கோயிலுக்கு வருவதும், இந்தம்மாளையும் தரிசித்து பஜனையிலும் கலந்துகொண்டு ஏழைகளுக்குச் செய்யும் அன்ன தானத்தையும் கண்டு களிப்பதோடு பரிபூர்ணமான உதவியுமளிக்க முற்பட்டு விட்டார்கள்.

ஊர் ஊராகச் சுற்றும் கருத்துடைய சன்யாசினியை அனேக ஊர்களில் மாதக் கணக்கில் தங்கச் செய்து போக விடாமல் ஆதர வளித்து நிறுத்திக்கொள்வார்கள்; ஜனங்களின் அபிமானத்தைத் தட்டிக்கொண்டு போகமாட்டாது தங்கிவிடுவாள் அதேபோல் இந்த ஊரிலேயும் தங்கும்படியாக ஏற்பட்டதோடு இந்த சமாராத னையின் அற்புத சம்பவம் நடந்த பிறகு பொது ஜனங்களின் ஆதரவு அபரிமிதமாக உண்டாகிவிட்டதால் அவளை இந்த;ஊரை விட்டுப் போகவே கூடாதென்று ஜனங்கள் வேண்டிக்கொண்டார்கள்.

அந்த வேண்டுகோளின்படியே சன்னியாசினி அங்கு தங்க இசைந்தாள். 'நல்லன வருங்காலையில் யாவுமே நன்மையாக முடியும். தீயன வருங்காலையில் எல்லாம் தீமையாயும் சங்கடமாயும் முடியும்' என்பது உலகத்தின் பழமொழி. அதேபோல் இந்த சன்யாசினி மகா வைராக்யக் கொழுந்தாயும், பகவத் பக்தியே தனது ஜீவ நாடியாகவும் கொண்டு ஜனங்களிடம் நேசமாகப் பழகி உயரிய விஷயங்களை எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்ததன் பயனால் "காக்காய் ஏறியது பழம் விழுந்தது' என்பதுபோல் அனேகருக்கு எதிர்பாராத சில நல்ல காரியங்கள் கைகூடின.

அதாவது நாம் முதலில் தெரிவித்த காமாட்சி, மீனாட்சி வகையராக்களில் முதலில் நம்பிக்கை ஏற்படாதிருந்தது மாறி நம் பிக்கையுண்டாகும்படியான சில நன்மைகள் உண்டாகிவிட்டன. அதாவது மீனாட்சியின் பெண்ணை அவள் புருஷன் சேர்த்துக் கொள்ளாமல் கொஞ்ச காலம் தள்ளி வைத்திருந்தான். இந்த சன் யாசி வந்த பிறகு தினம் கோயிலுக்குச் செல்வதும், சன்யாசினியின்

உபதேசத்தைக் கேட்பதும், பஜனையில் கலந்துகொண்டு பகவானைப் பிரார்த்திப்பதுமாக இருந்தாள்.'

மீனாட்சியின் மருமகனுக்கு வட இந்தியாவில் வேலையாகிவிட்டதாலும், இரு வீட்டாருக்குள்ளும் இருந்த மனஸ்தாபம் ஒருவாறு சமரசமாகிவிட்டதாலும் மனைவியை அழைத்துக்கொண்டு போய் விட்டான். மீனாட்சியம்மாளின் நம்பிக்கைக்கு இதைவிட வேறு வேண்டுமா! தன் வீட்டு வேலை கழிந்த நேரத்தில் சன்யாசினியினிடமே கதியாகிவிட்டாள்.

குறும்பாகவும், இழிவாகவும் பேசின கல்யாணியம்மாளுக்கு குடும்பமே சந்ததி அற்றுவிட்டதென்று எண்ணி இருந்த சமயம் சொர்ண விக்ரகம்போல் பேரன் பிறந்துவிட்டதால் சன்யாசியின் மீதிருந்த துர் எண்ணம் நீங்கிவிட்டது. இம்மாதிரியே பலருக்கு நல்ல காலம் பிறந்து நன்மைகள் வந்ததெல்லாம் சன்யாசினியின் மகிமைதான் என்ற மூட நம்பிக்கையும், குருட்டு பக்தியும் உண்டாகி விட்டன. 'ஒரு பக்கம் வெளிச்சமிருந்தால் மறு பக்கத்தில் இருளும் இருந்துதானே தீரும்' அதுபோல் கொண்டாடும் ஜனங்கள் ஒரு கோஷ்டி இருந்தாலும் கண்டபடிக் கூறும் ஜனங்களும் ஒருபுறம் இல்லாமலில்லை.

ஒரு தினம் கண்ணீர் வழிய, சோகம் தாங்கமாட்டாது அலங்கோலமான நிலைமையில் சௌதாமினி இச் சன்யாசினி இருக்குமிடம் வந்தாள். எப்போதும் சன்யாசினியைச் சுற்றிப் பல பெண்கள் உட்கார்ந்திருப்பது வழக்கம்போல் உட்கார்ந்திருந்தார்கள். சௌதாமினி சன்யாசியை வணங்கி விட்டு "அம்மணீ! நான் ஒரு மகா பாபத்தைச் செய்து கொடிய ஜென்மமெடுத்த அதிர்ஷ்டஹீனை. தங்களுடைய புனிதமான சரிதையை இன்று தான் நான் கேள்விப்பட்டு ஓடோடியும் வந்தேன்.

தாயே! என்னுடைய போதாக் காலக்கொடுமைகளால் பல விதத்திலும் நான் சிறுமைப்பட்டுவிட்டபோதிலும் என் கடமை மட்டும் ஒன்று இருக்கிறது. அதாவது, எனது வயது முதிர்ந்த பாட்டனுரையும், பால்மணம் மாறுத சிறுமியாகிய என் தங்கையையும் காப்பது எனது பொறுப்பாகிவிட்டது. அதன்

பொருட்டே நான் உயிர் வாழுவதாகக் கூறினலும் மிகையாகாது அதன்பொருட்டு நான் பரோபகாரமான தொழில் ஒன்று செய்து வருகிறேன். அதாவது ஆஸ்பத்திரியில் நர்ஸாக இருக்கிறேன்.

அம்மணீ! இன்று காலையில் திடீரென்று என் போதாக் காலக் கொடுமையினல் எனக்கு விரோதமாயுள்ள சில நர்ஸ்களினல் ஒரு சம்பவம் நடந்துவிட்டது. அதனல் என் தொழிலுக்கே ஹானி வந்தாலும் வந்திடுமோ என்று நான் பயப்படுகிறேன். அல்லது அந்த விரோதிகளால் வேறு ஏதாவது ஆபத்து நேருமோ என்ற பயந்தான் எனக்கு முக்கியமாகவிருக்கிறது. என்னுடைய கால பலன் எப்படி இருக்கிறதென்று சற்று குறி பார்த்துச் சொல்ல வேண்டும்.'' என்று பரிதாபமாகக் கேட்டாள்.

மிகவும் சிறு பிராயமாயுள்ள சௌதாமினியின் பரிதாபமும் சோகமும் நிறைந்த முகத்தின் தேஜஸானது அங்குள்ள எல்லோருடைய மனத்தையும் உருக்கியது. "உம்...ஐயோ! பாவம்...சிறு பெண்ணுக இருப்பினும் அதன் விசனம் கரைபுரண்டோடுகிறது, உலகமே இவ்வளவுதான். எல்லாம் இந்த க்ருஷ்ணன் செய்யும் மாயக்கூத்து'' என்றூர்கள் சில பாட்டிமார்கள்.

சன்யாசினியும் மிக்க வருத்தத்தோடு "அம்மா! நானும் உன்னைப்போல் ஒரு சாதாரண மனுஷிதான். எனக்கு சாஸ்திரம். ஜோஸியம் ஒன்றுமே தெரியாது. என்னப்பன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பாத தரிசனமும், சரணரவிந்தமே கதி என்ற நம்பிக்கையும் அதுவே, ஸ்மரணையும், அதுவே ஆகாரமும், சகலமும் அவனே, என்ற ஒரே ஒரு நம்பிக்கையுந்தான் எனக்குத் தெரியும். இந்த உலகமாகிய சாகரத்தில் நம்பிக்கை என்ற கப்பலில் போய்க் கோண்டிருக்கும் ஆண்டிச்சி நான்.

183005

அவனிடம் பக்திக்கும் நம்பிக்கைக்கும் முன்பு எந்த சாஸ்திரமும் ஜோஸியமும் மந்திர தந்திரமும் எம்மட்டும்? அம்மா! நீயோ பச்சிளங்குழந்தையைப்போலிருக்கிறாய். ஆனால் உன் முகத்தையும் கண்களையும் பார்த்தால் உனக்குள் உன் வாழ்க்கைக் குள்ளடங்கிய ஏதோ ஒரு பயங்கர ரகஸியம் இருப்பதுபோல் தோன்றுகிறது. எது இருப்பினும் எத்தனை பகைவர்களிருப்பினும் இந்த கிருஷ்ண

னின் சரணாரவிந்தத்தை நம்பி இரு. அனவரதமும் துதி செய்; இதுதான் சகல ரோக நிவாரணி, சகல பாப நிவாரணி; சகல சத்ரு விநாசினி.' இதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல எனக்குத் தெரியாது.

பூர்வ கர்மானுஸாரத்தை யனுபவிக்காது விடமாட்டான்' அனுபவித்தாலும் இவன் நாமத்யானமும், நம்பிக்கையும் இருக்குமானால் அந்த அனுபவங்கள் மலைபோல் தோன்றுமலும், வளாமலும் சகித்துக்கொள்ளும் சக்தி உண்டாகும். இதுதான் ரகஸ்யம்...ஆ... இப்போதுதான் ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. அம்மா! எனக்கு சற்று முன்பு நடப்பதுகூட மறந்துவிடுகிறது. என் கிருஷ்ணன் ஒருவன்தான் சதா என் நினைவிலிருப்பவன்....

இன்றுதான் பகல் 12 மணிக்கு நான்கு பேர்கள் — சிறு பெண்கள்தான்—நர்ஸ்கள் என்றுதான் அவர்களைப் பார்த்தால் தோன்றியது. அவர்களின் முகத்தைப் பார்க்கும்போதே க்ரூரமும் குடிகெடுக்கும் துர்ப்புத்தியும், வஞ்சமும் பளிச்சென்று தெரிந்ததேயன்றி மனிதத்தன்மையே சற்றும் தெரியவில்லை. அவர்களுக்கு இந்த இடத்தைப் பார்க்கும்போது ஏதோ விளையாட்டு இடம் போலும், ஹம்பக்கு செய்வதுபோலும் நம்பிக்கையற்ற உணர்ச்சியும் இருப்பதை அறிந்தேன்,

அவர்களை நான் கவனிக்கவே இல்லை. அவர்கள் முதலில் கேட்டதானது "எங்களுக்கு இரண்டு சத்ருக்களிருக்கிறார்கள். அவர்களைத் துலைப்பதற்கு ஏதாவது ஜோஸியமோ, மந்திரமோ, தந்திரமோ சொல்ல முடியுமா?" என்று கேட்டார்கள். இம்மொழிகளே என் காதில் நாராசம்போல் விழுந்தன. நான் ஒரே பதிலில் "எனக்கு ஒன்றுமே தெரியாது. ஒருவரையும் துலைக்கக் கூடிய சக்தி பேதையாகிய என்னிடமில்லை. மக்களின் பாபத்தையும், அக்ரமத்தையும் துலைக்கும் சக்தி இதோ இவனிடமிருக்கிறது. அதை வேண்டுமானால் தெரிந்துகொள்ளுங்கள்" என்றேன்.

அதே சமயம் சில பக்தர்கள் கண்ணனுக்குப் பாலும் தயிரும் கொண்டு கொடுத்தார்கள். உடனே அந்த பெண்கள் "ஓகோ! சாமி

யார் வேஷம் பூண்டு இந்த பாலேயும், தயிரையும் குடிக்கத் தெரியுமாக்கும். கூடை கூடையாய் பழங்களைத் தின்று கொழுக்கத் தெரியுமாக்கும்'' என்று இன்னும் ஏதேதோ உளறிக்கொண்டே சென்றுவிட்டார்கள். "அம்மா! நீ சொல்லும் எதிரிகள் ஒருகால் அவர்களாக இருக்கலாமோவென்று கூறினேன். எதற்கும் கடவுளின் பாதாரவிந்தத்தை நம்பி இரு. அதுதான் முக்கியம்'' என்றாள்.

சௌதாமினிக்கு அந்த நர்ஸுகள் வந்து சென்றதைக் கேட்டதும் தூக்கி வாரிப்போட்டது. எத்தனைதான் வேதாந்தமும் தத்துவங்களும் கேட்டபோதிலும் அவள் மனது நிலை கொள்ளவில்லை. தனக்கு என்ன விதம் தீங்கு செய்வார்களோ! இரண்டு எதிரிகள் என்றதால் மற்றொருவர் யாராகவிருக்கலாம்! என்மீதுள்ள பொறாமையினால் ஹரிநாத்திற்காவது...அல்லது லேடி டாக்டருக்காவது ஏதாவது தீங்கு செய்வார்களோ!...ஐயோ! கிருஷ்ணா! எந்த தீங்கு செய்தாலும் என்னொருத்திக்கு மட்டும் செய்து அவர்களின் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளட்டும். மற்ற யாருக்கும் ஒரு கெடுதியும் நேராமல் பார்த்துக்கொள்ளு என்னப்பனே!''...என்று மனதார வேண்டிக்கொண்டாள்.

சன்யாசினியை வணங்கி உத்திரவு பெற்றுக்கொண்டு பலவித குழப்பத்துடன் ரிக்ஷாவில் அமர்ந்து செல்கிறாள். இந்த கவலையினால் உலகமே இருண்டுவிட்டதாக அவளுக்குத் தோன்றியது. அப்போது மாலை 7 மணி இருக்கும். இவள் கோயிலைத் தாண்டி வரும்போது எதிரில் பெரிய தடபுடலான மேளமும், தாளமும் சப்தங் கேட்டது. பெருந்திரளான கூட்டத்துடன் ஊர்வலம் வருவதையறிந்தாள்.

வழியில் பெரிய கூட்டம் வருவதால் ரிக்ஷாவை தெரு ஓரமாக ஒதுக்கி நின்று கூட்டத்திற்கு வழி விட்டாள். மோட்டாரில் ஹரிநாத்தின் மனைவி சர்வாபரண பூஷிதையாய், வைர மயமாய் ரதிதேவிபோல் வீற்றிருக்கிறாள். ஹரிநாத் கையிலுள்ள புஷ்ப பொக்கேயை முகர்ந்து பார்த்துக்கொண்டே பக்கத்தில் வீற்றிருக்கிறான்.

ஆனல் அவன் முகத்தில் சுறுசுறுப்போ, சந்தோஷமோ ஒன்றுமே காணப்படவில்லை.

இடையிடையே சில விட புருஷர்களும் பெண்களும் கல்யாண தம்பதிகள்மீது பன்னீரைத் தெளிப்பதும், ரோஜா மலர்களைத் தூவுவதும், சந்தோஷமாகச் சிரிப்பதுமாக தடபுடல் செய்கிருர்கள். ஊர்வலத்துடன் பெண்டுகள் வெகு அலங்காரவதிகளாய் கையில் தட்டுகளுடன் வருகிருர்கள். கோயிலுக்குச் சமீபத்தில் வந்ததும் கல்யாண தம்பதிகளை இறக்கினர்கள்.

ரிக்ஷா வண்டியில் தன் ஸ்மரணையற்றுக் குழம்பிப்போய் பதுமைபோல் செல்லும் சௌதாமினி இந்த ஊர்கோலத்தையும் தன்னுருயிர் ஹரிநாத்தையும் கண்டவுடனே ஒரு புதிய ஜீவ சக்தியுண்டாகியவள்போல் நிமிர்ந்து உட்கார்ந்தாள். தம்பதிகளையே இமை கொட்டாமல் பார்த்தாள். முகத்தில் சந்தோஷமும் துக்கமும் ஒன்ருக ஜொலிக்கின்றன.

"ஈசா! இத் தம்பதிகளுக்கு தீர்க்காயுளைக் கொடுக்கவேண்டும். குறைவற்ற செல்வத்தையும், நோயற்ற வாழ்க்கையையும் கொடுத்துக் காக்கவேண்டும்'' என்று பைத்தியக்காரியைப்போல் தனக்குள் வேண்டிக்கொண்டாள். அவர்களையே பார்த்திருக்கையில் தம்பதிகள் இறங்கி கோயிலுக்குள் மறைந்தார்கள். கூட்டம் விலகியதால் ரிக்ஷாவாலாவும் வண்டியை இழுத்துச் சென்ருன். சௌதாமினிக்கு ஆகாயமும் பூமியும் ஒன்ருக இருண்டுவிட்டதுபோல் தோன்றிவிட்டன. கண்கள் நீர் வழிய மூடிக்கொண்டன. ரிக்ஷாவில் அப்படியே சாய்ந்துவிட்டாள்.

---


## ஸரஸராஜன்

சில்வானம் விற்றுப் புருஷருக்குத் தெரியாமல் பணம் சேர்த்து, நகைப்பித்து பிடித்துத் தறிதலைகளாய்த் திரியும் பெண்களின் கதி என்னவாகும் என்பதை நன்கு விளக்கிக் காட்டும் இச் சிறிய நாவலின் விலை அணு 4 தான்.

## 6-வது அதிகாரம்

### சுழல் காற்றில் சுழலும் உயிர்கள்

"குழந்தாய்! கடவுள் விட்ட வழியாகட்டும். இதற்கெல்லாம் கவலைப்பட்டுப் பயன் உண்டாகுமா? ...நம்மைப் பிடித்துள்ள போதாக் காலக் கொடுமை நம்மை எம்மட்டும் ஆட்டித் தீரவேண்டுமோ அம்மட்டும் ஆட்டித் தானே விடும். அந்த மேட்ரனுக்கு உன்னிடம் இவ்வளவு பழக்க மிருந்தும் அந்த நர்ஸுகளின் வார்த்தையைத்தானே எடுத்துக் கொண்டு அதையோர் பெரிய காரியமாக மேல்வரையில் கொண்டு போனாள். இருக்கட்டும் எல்லாம் சோதனைக்குத்தான் கடவுள் செய்கிறார்.

சௌதாமினீ! மருந்து விலை 15 ரூபாய் இருக்கும். அதை உடைத்ததற்கு அபராதம் 15 ரூபாய். 30 ரூபாயா அபராதம் போட்டார்கள்?...ஐயோ! இது எந்த தெய்வத்திற்கு ப்ரீதி... அம்மா! கண்ணீர் விடாதே...இதொரு தண்ட இழவு கொடுத்துத் துலைத்து விடு. இம்மட்டுடன் வேலையை விட்டு நீக்காதிருக்கிறார்களே! அதுவே போதும்." என்று தாதா விசனத்துடன் கூறினர்.

சௌதாமினி :—தாதா! இந்த தொழில் மகா பரோபகாரமானதும் புண்ணியமானதுமாயிற்றே என்று எடுத்துக்கொண்டதற்குச் சதா கவலையும், பயமும், மனத்தில் ஒருவிதமான பீதியும் குடி கொண்டு வாட்டுகின்றன. நோயாளிகளோ தம்மைச் சரியாய் கவனிப்பதில்லை என்று வருந்தி குறை கூறுகிறார்கள். மேல் அதிகாரிகளோ நினைத்ததற்கெல்லாம் அதிகாரம் செய்கிறார்கள். உடன் பிறந்தே கொல்லும் வியாதி யைப்போல் கூடவிருந்து தொழில் செய்யும் சத்துருக்களின் சூழ்ச்சியோ ஒரு புறம் பயங்கரமாகவிருக்கிறது. என்ன செய்வது தாதா?...

கிழவர் :—அம்மா! கஷ்டங்களை ஜெயித்து நன்மை யடைவதற்குத்தானே கடவுள் மனிதர்களைப் பிறப்பிக்கிறுர்... இந்த விஷயத்தில் உன் பெரிய டாக்டரம்மாள் என்ன சொன்னுர்கள்?

சௌதாமினி :—ஊம்! காலக்கொடுமையின்படித்தானே சந்தர்ப்பச் சாக்ஷிகளும் அமையும். மேட்ரனின் அழுத்தமான வார்த்தையைத்தானே அவர்களும் எடுத்துக்கொள்வார்கள். என் கையிலிருந்து வேண்டுமென்றே தட்டிவிட்டார்கள் என்று நான் ஒருத்தி மட்டும் கூறுவது எங்காவது செல்லுமா! என்னிடம் ப்ரியமாக விருந்தாலுங்கூட இச் செய்கை ஒருகால் உண்மையாகவிருக்குமோவென்று சந்தேகம் உண்டாகி என்னைக் கண்டித்து புத்திமதிகளும் உரைத்தார்கள். இத்தனை நாட்களாக நல்ல பெயர் வாங்கிய எனக்கு இப்போது ஒரு கரும் புள்ளி விழுந்துவிட்டதானது எத்தனை அவமானம்! இதோடு விட்டாலும் போதும். இன்னும் அந்த நர்ஸ்களால் என்னென்ன விபத்துக்கள் வருமோ வென்று மிகவும் பயமாகவிருக்கிறது. அந்த சன்யாசினி சொல்லியதிலிருந்து இன்னும் கவலை யதிகரிக்கின்றதேயன்றி குறையவில்லையே....

கிழவர் :—அம்மா! சௌதாமினி! அந்த சன்யாசினி சொல்லியபடியே கடவுளின் பாதமே கதி என்று நம்பி அவனையே வேண்டித் தொழுது வா! இதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? அந்த துஷ்ட நர்ஸுகளைக் கண்டால் நீ தூர விலகிவிடு. இன்னும் அங்கு அனேக நர்ஸுகள் இருக்கிறுர்களே! அவர்களில் உனக்கு சினேகத்திற்குத் தகுந்த யாருமில்லையா?

சௌதாமினி :—இந்த நால்வரைப்போல் அங்கு வேறு ஒருவருமே இருக்கமாட்டார்களென்றுதான் கூறுவேன். எத்தனையோ நல்லவர்களும் அறிவாளிகளும் ஏராளமாக இருக்கிறுர்கள். ஆனல் நான் இருக்கும் வார்டில் என்னுடன் அவர்களுக்கும் ட்யூட்டி, மற்றவர்களை எப்போதோ ஒழிந்த நேரத்தில் பார்க்கலாமேயன்றிப் பேசவும் பழகவும் முடியாது...உம்...எல்லாம் என் விதி....தாதா! இப்போது நாம் இருக்கும் நிலைமையில் திடீரென்று 30 ரூபாய் எப்படி சமாளிப்பது? அதை உடனே கட்டிவிடவேண்டும். சம்ப

ளத் தேதி வரைக்கும் தாமதித்தால் அழகல்ல. இதற்கு என்ன செய்வது?

கிழவர்:—அம்மா! கோகிலா! குப்பு மாமாவை நான் கூப்பிடுவ தாகக் கூட்டிக் கொண்டு வாம்மா!—என்றார். உடனே கோகிலா ஓடினாள்.

சௌதாமி:—தாதா! இன்று சாயங்காலம் ஹரிநாத்தின் வீட்டில் டாக்டர்களுக்கும் நர்ஸுகளுக்கும் மட்டும் டீ பார்டியாம். அழைப்பு வந்திருக்கிறது. போகலாமா வேண்டாமா?.......

கிழவருக்கு இதைக் கேட்டதும் ஒருவிதமான விசனமே அவர் முகத்தில் சூழ்ந்து கொண்டது. பெருமூச்சு விட்டார். சௌதாமினியும் குனிந்த தலையை நிமிரவில்லை. கிழவர் மெல்ல சௌதாமினியை நோக்கி "சௌதாமினீ! டாக்டர்களுக்கும் நர்ஸுகளுக்கும் மட்டும் ப்ரத்யேகமாக இன்று பார்ட்டி வைத்திருப்பதால் நீ போகாமலிருந்தால் நன்றாக இருக்காது. ஏன் வரவில்லை என்கிற கேள்வி பிறக்கும். வீண் வம்புக்கு இடம் உண்டாகும். நீ சென்று ஒரு பக்கம் உட்கார்ந்து, வந்ததைக் கணக்குக் காட்டிவிட்டு சீக்கிரம் வந்து விடு. கச்சேரிகள் ஏதாவது இருந்தால் கூட நீ தாமதிக்க வேண்டாம், ஒருவரிடமும் பேசவேண்டாம்...... ...உனக்கு நேர மாகிறது; கிளம்பு. குப்பு வந்தால் நான் அவரிடம் பணம் கேட்டுப் பார்க்கிறேன்" என்றார்.

சௌதாமினிக்கு 'போகலாமா, வேண்டாமா!' என்கிற எண்ணமே மனத்தில் போராடிக் கொண்டிருந்ததால் கிழவர் போகும்படி உத்திரவு கொடுத்துவிட்டதற்குப் பிறகு புறப்பட்டாள். மன மென்னவோ சற்றும் அமைதியின்றி தத்தளிக்கின்றது. சங்கடம் செய்கின்றது.

ஹரிநாத்தின் பங்களாத் தோட்டமோ தேவேந்திரன் மாளிகையைப்போல் அலங்காரத்துடன் ப்ரகாசிக்கின்றது. நவநாகரிக முறையில் பார்டிக்குத் தயார் செய்திருந்தது. ஹரிநாத்தும் அவன் மனைவியும் ஒரு புறம் அலங்காரத்துடன் நின்று எல்லோரை

யும் "வாருங்கள்; வாருங்கள்" என்று கை குலுக்கியும் கை கூப்பியும் சலாம் செய்தும், மதத்தாருக்குத் தக்கபடி வரவேற்று உள்ளே அனுப்புகிறார்கள். உள்ளே ஊர்மிளாவின் தாய் தந்தையர்கள், மற்றுமுள்ள சொந்தக்காரர்கள் அவர்களை அழைத்து வந்து பார்ட்டி நடக்கும் டேபிலருகில் அமரச் செய்கிறார்கள்.

செளதாமினி மிகவும் துக்கமும் வெட்கமும் பாதித்தவளாய் தலை குனிந்து வந்தாள் ஹரிநாத் எல்லோரையும் வரவேற்பது போல் "வாருங்கள்"......என்று முதலில் யாரோவென்று கூறி விட்டான்...நிமிர்ந்து பார்த்ததும் செளதாமினி என்பதை யறிந்ததும் சடக்கென்று முகத்தில் ஒருவிதமான மாறுதல் உண்டாகிவிட்டது ஒரு க்ஷண நேரம் தம்பித்து நின்று விட்டான். "செளதாமினீ!" என்று தன்னை மீறி அழைத்துவிட்டான். செளதாமினி ஹரிநாத்தை நிமிர்ந்து பார்த்தாள். நான்கு விழிகளும் ஒன்றையொன்று விழுங்கவிடும்போல் சந்தித்து மறு க்ஷணமே அசதியால் கீழே சாய்ந்தன.

மகா புத்திசாலியான செளதாமினி தன்னைச் சமாளித்துக் கொண்டு, முகத்தில் நகைப்பை உண்டாக்கிக் கொண்டு......"டாக்டர்!......விவாகமானது பற்றி மெத்த சந்தோஷம். கடவுள் தங்களை ஆசிர்வதிப்பாராக" என்று கூறிக்கொண்டே தான் கொண்டு வந்திருந்த சிறு காகிதப் பெட்டியை டாக்டர் கையில் கொடுத்து விட்டு உள்ளே சென்றாள். ஊர்மிளா தன் சிநேகிதைகளை அச்சமயம் வரவேற்றுப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்ததால் செளதாமினியைக் கவனிக்கவில்லை.

எல்லோரும் நாற்காலிகளில் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள். ஊர்மிளாவும் ஹரிநாத்தும் மத்தியில் சேரில் உட்கார்ந்தார்கள். செளதாமினி ஒன்றுமே சாப்பிடவில்லை. ஏதேதோ யோசித்தபடியே உட்கார்ந்திருந்தாள். இவளுக்குப் பின்புறத்து வரிசையிலிருந்து கடகடவென்று நகைப்புடன் "ஏண்டீ ஆசைப் படுகிறாய்? செளதாமினி பக்கத்தில் உட்கார்ந்திருந்தாலும் நிறைய உபசாரங்களுடன் இன்னும் ரெண்டு தட்டுகள் கிடைத்திருக்கும்,

இங்கு முதலில் வைத்ததோடு சரிதான்...ஐயோ! பாவம்...அவளுக்குச் சாப்பிடப் பிடிக்குமாடீ! மூணும் பேஸ்து மாதிரி உட்கார்ந்திருக்கிறுள் என்ற குரலும் கேட்டது.

ஏற்கெனவே விசனத்தினல் வருந்தும் சௌதாமினிக்கு இவ் வார்த்தைகள் இன்னும் புண்ணில் கோலிடுவதுபோலிருக்கின்றன. அந்த குரலிலிருந்து அவர்களை இன்னுரென்று தெரிந்து கொண்ட சௌதாமினி திரும்பிக்கூட பார்க்கவில்லை. எப்போது இந்த விருந்து முடியும் என்று எதிர்பார்த்திருந்தாள். சாப்பாடு முடிந்த உடனே எல்லோரும் தாம்பூல சகிதம் வேறு பந்தலுக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள்.

மாயவித்தை அல்லது கண்கட்டு வித்தை (Magic) என்றதை ஒரு பெரிய நிபுணர் செய்யவாரம்பித்தார். ஜனங்கள் முற்றும் அந்த ஜாலவித்தையில் ஈடுபட்டு வியப்பும், நகைப்பும், கொக்கரிப்புமாக அனுபவிக்கிருர்கள். சௌதாமினிக்கு அங்கு உட்காரவே மனம் சகிக்கவில்லை. அவளை ஏதேதோ சித்திரவதை செய்கிறது. தான் மெல்ல நழுவி விடுவதே சரி என்று துணிந்து விட்டாள். சுற்று முற்றும் பார்த்தாள். ஒருவரிடமும் சொல்லிக்கொள்ள முடியாமல் எல்லோரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்; மௌனமாக எழுந்து நழுவி விட்டாள். அவள் அந்த பந்தலைத் தாண்டிச் செல்லும்போதுதான் ஹரிநாத் அவள் போவதைக் கவனித்து உடனே தானும் எழுந்து வந்தான்.

இதற்குள் சௌதாமினி தன்னுடைய ரிக்ஷாவில் அமர்ந்து போய் விட்டாள். வீதி கேட்டு பரியந்தம் வந்து ஹரிநாத் பார்த்தும் பயனற்றுவிட்டது. ஹரிநாத்தின் மனம் உடைந்ததுபோலாயிற்று. ஆனல் ஒன்றையும் மேலுக்குக் காட்டிக் கொள்ளாமல் உள்ளேயே அடக்கி பெருமூச்சு விட்டபடியே மீண்டும் பந்தலுக்கு வந்தான். பார்டிகள் முடிந்து எல்லோரும் விடை பெற்றுக் கொண்டு சென்ருர்கள்.

ஹரிநாத். தன் படுக்கைக்குச் சென்ருன். இதுகாறும் போல் இனிமேல் இவனது படுக்கை தனிவாசமில்லையல்லவா! இவனுக்கு

எல்லோரும் கொடுத்த பரிசுகள் முற்றம் அவ்வறையில் பெரிய மேஜைமீது வைத்திருந்தான். அலங்காரவதியான ஊர்மிளா இந்த பரிசுகளைப் பார்த்து "என்ன மாமா! என்னைவிட நீங்கள்தான் அதிக பரிசு அடித்து விட்டீர்கள். எனக்கு வந்திருப்பவைகளை விட உங்கள் பரிசுகளே அழகாகவும் புது புது மாதிரியாகவும் இருக்கின்றன. பேஷ்!...டாக்டர்! இந்த கோப்பை வெகு அழகாக இருக்கிறது. இதில்தான் நான் இனிமேல் காப்பி குடிப்பேன். ஏன் இப்போதே இதில் பாலைக் குடித்தால் என்ன? இது எனக்குத்தானே...

ஹரி:—எல்லாம் உன்னுடையதுதானே! இதற்கு மட்டும் கேள்வி என்ன?...ஊர்மிளா! எனக்குப் பால் வேண்டாம். பார்டியில் சாப்பிட்டதே அதிகமாகிவிட்டது.—என்றான்...

இரவு நெடுநேரமாகிவிட்டது. கடியாரத்தில் 12 டாங் டாங் என்று இப்பதான் அடிக்கின்றது. ஊர்மிளா நன்றாகத் தூங்குகிறாள். ஹரிநாத்திற்கு அன்று சௌதாமினியுடன் பேச முடியாது போய் விட்டதே என்ற விசனம் ஒரு புறமும், அவள் ஆஸ்பத்திரியில் நடந்துவிட்ட சம்பவத்தை டாக்டர் மூலம் அறிந்து கொண்ட வருத்தம் ஒருபுறமும் அவனை பாதிக்கின்றன. "ஒரு போதும் ஒரு குற்றமும் செய்யாதிருந்த இவளுக்கு இத்தகைய அபராதமும், ஒரு கெட்ட பெயரும் வந்து விட்டதே!...ஐயோ! பாவம்!...

அன்று ஏதோ கலக்கம் அதிகரித்திருக்க வேண்டும்! அதோடு எப்படியோ கைதவறிப்போயிருக்க வேண்டும்? அந்த விசனத்துடன் மரியாதைக்கு வந்து தலைகாட்டி விட்டுச் சென்றாள். ஊம்...நம்மால் என்ன உபகாரம் செய்ய முடியும்? எதைச் செய்தாலும் சமூகமும் பொறாமை ஜனங்களும் கயிறு திரித்து உயிருக்கு உலையன்றோ வைப்பார்கள்?...இந்த நிலைமையில் எனக்குப் பரிசும் ஏதோ கொடுத்திருக்கிறாளே! அதை பிரித்துப் பார்ப்போம்." என்று எண்ணியவாறு படுக்கையை விட்டு எழுந்தான்.

எங்கும் நிச்சப்தம் குடிகொண்டிருக்கிறது. ஊர்மிளாவும் நிம்மதியாகத் தூங்குகிறாள். சௌதாமினியின் பரிசை மட்டும்

சட்டைப் பைக்குள் தனியாக வைத்திருந்ததை எடுத்துப் பிரித்தான். அதில் வெகு அழகான கை வேலைகள் செய்த கைகுட்டைகள் ஒரு டஜனும், கையினுலேயே செய்த டேபில் க்ளாத் ஒன்றும் இருந்தன.

அதில் அன்றே பூத்த ரோஜா மலர் ஒன்றும் இருந்தது. ஒரு சிறிய துண்டுக் கடிதத்தில் "என் அன்பின் பரிசுகள்!" என்று மட்டும் அழகான முத்துக்கள் சேர்ந்ததுபோல் எழுதி இருந்தது. கண்ணில் ஒத்திக்கொண்டு அந்த கடிதத்தைத் தன்னுடைய வாழ்க்கைக் குறிப்பு டைரியில் மடித்து வைத்துக்கொண்டான்...

ரோஜா புஷ்பத்தை எடுத்துப் பார்த்தான். அதில் சௌதாமினியின் உருவம் அப்படியே தெரிவதுபோல் தோன்றியது. கைக்குட்டைகளை எல்லாம் எடுத்துக் கண்ணில் ஒத்திக்கொண்டு மார்பில் அணைத்தான்; பித்தன்போல் பிதற்றினான், கண்களில் கண்ணீர் முட்டுகிறது. கைகுட்டைகளை முகத்தில் வைத்தபடியே கட்டிலில் சாய்ந்தான். "சௌதாமினீ! சௌதாமினீ! என்னைப்பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. உன்னிலைமை...உன் கதி...உன் வாழ்க்கையின் மர்மம்தான் என்னவோ! தெரியவில்லையே?"...என்ற கலக்கத்துடன் அப்படியே படுத்துவிட்டான்.

---

## 7-வது அதிகாரம்

### க்ஷாத்திர அம்பு—ஆத்திர நெருப்பு

சௌதாமினி அபராதப் பணத்தைக் கட்டிவிட்ட பின்னரும் அவள் மனத்திலிருந்த திகிலும் வேதனையும் மாறவில்லை. தன் தொழிலைச் செய்வதைத் தவிர மற்ற நேரத்தில் யாருடனும் பேசாமல் தனிமையில் பதுமைபோல் உட்கார்ந்திருப்பாள்.

"என்னை இக் கதிக்கு, அவமானத்திற்கு ஆளாக்கிய இந்த நர்ஸுகள் செய்யும் அக்ரமத்தை நான் அதிகாரிகளிடத்தில் கையும் மெய்யுமாய் காட்டிவிட்டால் என்ன செய்ய முடியும்? இவர்களின் கதி அதோகதியாகிவிடுமன்றோ! நான் என்ன பாவத்தைச் செய்தோ இத்தகைய பாழ் ஜன்மம் எடுத்துத் தவிக்கின்றேன். இன்னும் ஒருவருக்குத் தீங்கு ஏன் செய்யவேண்டும் என்று என் மனம் என்னையே தடுக்கிறது. இதுபோன்ற உணர்ச்சி அந்தப் பாவிகளுக்கு இல்லையே! இப்படியும் ஒரு ஜென்மம் இருக்குமா?'' என்று விசனித்த படியே இருக்கையில் மற்றொரு நர்ஸ் அங்கு வந்து"என்ன சௌதாமினீ! ஏதோ மாதிரியாக உட்கார்ந்திருக்கிறாயே! உடம்புக்கு என்ன?...உன் விஷயத்தைக் கேள்விப்பட்டது முதல் நானும் ஜீவமணியும் மிகவும் வருத்தப்பட்டோம். இவர்கள் செய்யும் அனியாயத்தை அப்படி வெளிப்படுத்தினால் இவர்கள் தலைகாட்டிப் பிழைக்க முடியுமா!

சௌதாமினீ! நானும் சொல்லக்கூடாதென்றுதான் பேசாமலிருக்கிறேன். எத்தனை மோசவழியாலும், தந்திர வழியாலும் ஆஸ்பத்திரியிலிருக்கும் உயர்ந்த மருந்துகளை எப்படி எல்லாம் வெளியில் கொண்டுபோய் ரகஸ்யமாக விற்றுப் பணமாக்குகிறார்கள் தெரியுமா? அதோடு இந் நால்வரும் பேருக்கு ஆஸ்பத்திரியில் ஒழுங்காக நடக்கும் பேர்வழிகளைப்போல் நடிக்கிறார்களேயன்றி இவர்களை ஆஸ்பத்திரி ட்யூட்டி இல்லாத நாட்களில் குதிரைப் பந்தயத்திலும் இன்னும் மற்ற இடங்களிலும் தாராளமாகப் பார்க்கலாம். அடிக்கடி இவர்கள் ஒரு கூட்டத்துடன் சுற்றுவதாயும் அவர்கள் மூலமே மருந்துகள் திருட்டுத்தனமாக விற்பதாயும் குதிரைப் பந்தயத்தில் வேலையாயிருக்கும் என் அண்ணன் சொல்கிறான்.

சௌதாமினீ! இவர்கள் வெளியிலிருந்து வரும் ட்யூட்டியை வைத்திருப்பதனால் எந்த அக்ரமத்தை வேண்டுமானாலும் செய்துவிடலாமா! உன்னிடம் இத்தனை ப்ரீதியாகவிருந்த டாக்டர்கூடவா இதையே நம்பிவிட்டார்கள்! அவர்களை ஒன்றும் விசாரிக்கவில்லையா!'' என்று தவமணி மிக்க அன்புடன் கேட்டாள்.

சௌதா :—தவமணீ! என் விதியைக் குறைகூறவேண்டுமே யன்றி மற்ற யாரையும் குறை சொல்லி உபயோகமில்லை. என்னிடம் ப்ரியமாக இருந்தாலுங்கூட கட்டுப்பாட்டின்படித்தானே அவர்கள் நடக்கவேண்டும். ஏற்கெனவே என்னிடம் ப்ரியமாயிருப்பதுபற்றி தானே இத்தனை வயிற்றெரிச்சல்! அவர்கள் இது விஷயத்தை இப்படியே விட்டுவிட்டால் இன்னும் விபரீதமாகிவிடாதா! அதற்காகவே அவர்கள் பேசாதிருந்துவிட்டார்கள்.

தவமணி :—சௌதாமினீ! அதோ பாரு....நால்வரும் நம்மையே பார்த்துக்கொண்டு மரத்தடியில் நிற்கிறார்கள். கண்ணிலேயே என்ன க்ரூரம்....என்ன பொறாமை வழிகிறது பார். நீயும் நானும் ஏதோ சதியாலோசனை செய்வதுபோல் பார்க்கிறார்களே!

சௌதா :—தவமணீ! கடவுளின் பார்வை நம்மீது சரியாக இருக்குமாயின் யார் பார்வைதான் என்ன செய்ய முடியும்? அவன் கிருபைதான் நமக்கு அவச்யம். அது கிடைத்தால் போதும். நல்லது செய்வதும் அவனே; அது அல்லது செய்வதும் அவனே யன்றோ! ஆ! மணி ஆய்விட்டது. நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கவேண்டும் —என்று சொல்லிக்கொண்டே எழுந்து கையில் மருந்து பாட்டிலுடன் சென்றாள்.

மரத்தடியிலிருந்து இவர்களைக் கவனித்துக்கொண்டிருந்த நால்வரும் பொறாமையும் வயிற்றெரிச்சலுங்கொண்டு "இவளுக்கு இத்தனை அவமானமும் அபராதமும் வரும்படிக்குச் செய்தும் இன்னும் இவள் எல்லோராலும் மதிக்கப்பட்டு மேன்மையாகவே இருக்கிறாளே! இவளுக்குச் சரியானபடி வேறு என்ன செய்யலாம்?" என்று யோசிக்கத் தொடங்கினார்கள்.

முதல்வள் :—இவளை எப்படியாவது பெரிய டாக்டர் வெறுக்கும்படியோ, அன்றி கோபித்து ஆஸ்பத்திரியையே விட்டுத் தள்ளிவிடும்படியோ செய்துவிட்டால்தான் நாம் இங்கு மதிப்பாயும், பெரிய டாக்டரின் அன்பு பெற்றும் வாழ முடியும். இவள் இருக்கும் வரையில் நாம் எந்த விதத்திலும் உயர முடியாது. இதற்கு வழி நாம் முக்யமாகத் தேடவேண்டும்.

இரண் :—ஆம்! அப்படித்தான் செய்யவேண்டும். இப்போது நடந்துள்ள விஷயம் ஆறிப்போவதற்குள் மற்ருெரு விஷயத்தையும் செய்துவிட்டால் பெரிய டாக்டருக்கு இவளிடம் உள்ள அன்பு அப்படியே மாறிவிடும். அதற்குச் சரியான காரியம் இன்றே செய்துவிடலாம். அதாவது, மூன்ருவது வார்டில் ஒரு மேஜர் ஆபரேஷன் ஆன லேடி ஒருத்தி படுத்திருக்கிருளே! அவளுக்கு இன்று மூன்று மணிக்கு பெரிய டாக்டர் நேரில் இஞ்ஜெக்ஷன் செய்வதாயும், சரியாக இரண்டு மணிக்கு ஒரு மருந்தும், மாத்திரையும் கொடுக்கும்படிக்கும் சற்று முன்பு சொல்லியதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் இன்னும் சற்று நேரங்கழித்து சௌதாமினியிடம் போய் டாக்டருக்கு ஏதோ அவசர வேலை இருக்கிறபடியால் 3 மணிக்கு வர முடியாதாம். நாலு மணிக்குத்தான் வர முடியுமாம். உன்னிடம் சொன்ன மருந்துகளை மூன்று மணிக்கு கொடுக்கும்படி சொல்லச் சொன்ஞர்கள்.' என்று சொல்லிவிடுகிறேன். அவள் அவ்வாறே செய்யத் தவறமாட்டாள். அவள் போகும் போது மூன்றடித்துவிடும். உடனே டாக்டர் வந்துவிடுவாள். இது ஒன்றே போதும்.

மூன்ருவது நர்ஸ் :—ஆம்; ஆம்! இது சரியான யோசனை. உன் புத்திசாலித்தனமே மெச்சக்கூடியது...

அவர்கள் இப்படியும் அப்படியும் வட்டமிட்டுக்கொண்டே இருந்தார்கள். சௌதாமினிக்கு இந்த சதியாலோசனையின் மர்மம் என்ன தெரியும்? வழக்கம்போல் குழந்தைகளுக்கு ஸ்நானம் செய்விக்கையில் மேற்குறித்த நர்ஸ்களில் ஒருத்தி முன்யோசனைப் படிக்கு சௌதாமினியிடம் மெல்ல கூறிவிட்டுச் சென்ருள்.

வீட்டிலிருந்து சாப்பாடு வந்ததும், சௌதாமினி அதைச் சாப்பிட்டுவிட்டு சற்று அலுப்பாய் அப்படியே நாற்காலியில் உட்கார்ந்தபடியே மேஜையின்மீது சாய்ந்திருந்தாள். தன்னை மீறிய களைப்பினுல் அப்படியே சற்று கண்ணை மூடிவிட்டாள். அதனுல் பொது கடியாரங்களில் மணியடித்ததையும் கவனிக்க முடியாது போய்விட்டது.

கண்ணைத் திறந்ததும் அலறிக்கொண்டே மணியைப் பார்த்தாள். சரியாக மூன்றடிக்க 3 நிமிடங்கள் இருந்தன. 3 மணிக்கு மருந்தும் மாத்திரையுங் கொடுக்கவேண்டிய ஏற்பாட்டுடன் எடுத்துக்கொண்டு நோயாளியிடம் சென்ருள். இவள் சென்ற அதே நிமிடம் பெரிய டாக்டரும் டாக்கு, டிக்கு என்று வந்துவிட்டதைப் பார்த்ததும் சௌதாமினிக்கு ஒன்றும் புரியவில்லை. வேறு யாரை யாவது கவனிக்க வந்திருக்கிருளோவென்று எண்ணி எழுந்து மரியாதை செய்தாள்.

பெரிய டாக்டர் :—என்ன சௌதாமினி! சரியாக 2 மணிக்குத்தான் மாத்திரையும் மருந்தும் கொடுத்தாயா! அன்றி அதற்குமேல் கொடுத்தாயா!—என்று சகஜமாகக் கேட்டாள். இது கேட்ட சௌதாமினிக்கு தூக்கி வாரிப் போட்டது. உடனே வெகு சாந்தமாக பேசத் தொடங்கி "என்ன டாக்டர்! நீங்கள் 3 மணிக்கு கொடுக்கச் சொல்லியதாக கோலாகலம் தெரிவித்தபடியே இப்போதுதான் கொடுக்க வந்திருக்கிறேன்.

பெரிய டாக்டர் :—என்ன! என்ன! இன்னும் கொடுக்கவில்லையா? 3 மணிக்கா நான் கொடுக்கச் சொன்னேன். பேஷ்....உனக்கென்ன மூளை கலங்கிவிட்டதா!...இத்தனை நேரம் என்ன செய்தாய்? ...தூங்கினயா! இந்த கேஸ் மிகவும் அபாயகரமானது என்றதனுல் தானே உன்னையே கவனிக்கச் சொன்னேன்...ஒரு மணி காலம் தப்பாக நீ என்ன வேலை செய்கிருய்... இந்த மனுஷிக்கு ரெண்டு மணிக்கே அந்த மருந்தைக் கொடுக்காமையினுல் கையில் (பல்ஸை) நாடியைப் பாரு. குறைந்துகொண்டே வந்துவிட்டது...உன் புத்தி எங்கே போயிற்று... கேஸைக் கெடுக்கவா நீ வேலை செய்கிருய்? நானு மூன்று மணிக்குக் கொடுக்கச் சொன்னேன்? எங்கே அந்த கோலாகலம்'' என்று கர்ஜித்தபடியே சௌதாமினியைப் பிடித்து இழுத்துத் தள்ளினுள்.

"ஐயோ! இப்போது ஒரு மணி காலம் வீணுகிவிட்டதே என்ன செய்வேன்? பல்ஸை விழுந்துவிடும்போலிருக்கிறதே....நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?''...என்று கண்கள் சுழலமிடுகின்

றன. நெருப்புப் பொறி பறக்க விழிக்கிருள். நோயாளியின் உடம்பு ஜில்லென்று போய்விட்டது. இதையே ஒரு சமயமாகக் கொண்ட அந்த குடிகேடிகளில் ஒருத்தி ஒன்றுமறியாதவள்போல் இங்கு வந்து...''ஐயோ! செளதாமினீ! என்னிடம் ரெண்டு மணிக்கு எழுப்பு என்று சொல்லி இருந்தாலும் எழுப்பி இருப்பேனே!... உனக்கு அர்ஜெண்டு வேலெ இல்லாமையினுல் தூங்குகிருயாக்கும் என்றல்லவா பார்த்தேன்''...என்று வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல், சற்று கண்ணயர்ந்த ரகஸ்யத்தையும் கூறிவிட்டாள்.

இதைக் கேட்ட டாக்டருக்கு கோபம் பொங்கிவிட்டது...... பல்லைக் கடித்துக்கொண்டு......"ஆஹ்ஹா!......இந்த இடம் உனக்குத் தூங்கும் இடமும், சோம்பேறி மடமும் என்று வேலை செய்யும் நிலைமைக்கா வந்துவிட்டாய்?......சீச்சீ ...... வெட்கம்! வெட்கம்! நல்ல பெயர் வாங்கினதெல்லாம் மாறிப்போய் இத்தகைய கேவல நிலைமைக்கு நீ வந்த பிறகு இனி நீ இந்த தொழிலுக்கே லாயக்கில்லாது போய்விட்டாய்......இந்த கேஸ் தோற்றுவிட்டால் இந்த பழி யாரைச் சாறும்?......இதற்கு யார் ஜவாப்தாரி......பேசாமடந்தை போல் நிற்கிருயே......என்று கூறிக்கொண்டே செளதாமினியின் கையிலிருந்து மருந்தை வெடுக்கென்று பிடுங்கித் தானே கொடுத்தாள்.

கோலாகலம் வெகு விரைவாக அங்கே வந்து கண்கள் சிவக்க கோபத்துடன் ''ஏண்டீ! செளதாமினீ! நாஞ உன்னிடம் தெரிவித்தேன்.... ஐயயோ! டாக்டர்! இது முழு மோசம்! வீண் பழியை என்மேல் சாட்டித் தான் தூங்கிவிட்டதை மறைக்கப் பார்க்கிருள். வேலையொன்றுமில்லையோ என்னவோ! நிம்மதியாகத் தூங்குகிருள் என்று நானும் மற்றவர்களும் நினைத்தோம். பாக்யத்தைக் கேளுங்கள். இன்னும் பாலாபிஷேகத்தைக் கேளுங்கள். இது மகா அனியாயம்!......நீ தப்பித்துக்கொள்ள எங்கள் தலையில் ஏனடீ பாறையைப் புரட்டுகிருய்?'' என்று ஒரே அடியாகக் கத்திப் பேசினுள்.

தாக முடியாத கோபத்துடன் டாக்டர் கோலாகலத்தை நோக்கி "சரி......உன் வேலையைப் பார்க்கப் போ......இங்கு நிற்க

வேண்டாம். இவள் தூங்கிவிட்ட குற்றத்தை இவள் மூஞ்சியும் கண்ணுமே எடுத்துக் காட்டுகிறது. ஆகையினால் இதற்கு இன்னும் சாக்ஷி என்ன? விசாரணை என்ன? ... வேலைக்கு லாயக்கற்றவளாய்ப் போய்விட்டாள்.'' என்று படபடத்துக் கூறினாள்.

சௌதாமினி கண்ணீர் பெருகியவாறு "டாக்டர்!......... டாக்டர்......இவள் சொல்வது முழு மோசம்.......இவளே....... என்னிடம் நீங்கள் தெரிவித்ததாகக் கூறியதை ஓரேயடியாய் இல்லை என்று சாதிக்கிறாள்...கடவுள்தான் சாக்ஷி....டாக்டர்!...என்மீது குற்றமே இல்லை. தயவு செய்யவேண்டும்...

பேரிய :—சீச்சீ...பெரிய வேதாந்தம் பேசுகிறாயா!...இந்த அல்ப காரியத்தைச் சரியாக கவனிக்கத் தெரியாத நீ இனி நர்ஸ் வேலையிலிருக்க சற்றும் லாயக்கே இல்லை...உன்னை இப்போதே டிஸ்மிஸ் செய்துவிட்டேன்...உன்னை நம்பி உன்னிடம் ஒப்பித்த நோயாளியைக் கவனிக்காது எனக்கும் ஆஸ்பத்திரிக்கும் கெட்ட பெயரை உண்டாக்கிவிட்ட நீ இனி இங்கிருக்க சற்றும் தகாது... போய்விடு...நிற்காதே...ஊம்...இனி உன் சேவகம் வேண்டாம்.... இப்படியே அஜாக்ரதையாகவிருந்து குடியைக் கெடுக்கவேண்டாம் ...போய்விடு...என்றாள்.

சௌதாமினியின் மனம் எப்படித்தானிருக்கும்?...கண்ணீர் மாலை மாலையாக வழிகிறது. துக்கம் பேச முடியாது தொண்டையை அடைத்துவிட்டது. ஏதோ பேசவேண்டுமென்று வாயெடுத்தால் வாய் எழும்பாது தடுக்கிறது. நோயாளியின் பல்ஸோ விழுந்தே போய்விட்டது.

டாக்டர் நோயாளியை பரிசோதித்துப் பார்த்து பல்ஸ் அடியோடு விழுந்துவிடும் நிலைமைக்கு வந்துவிட்டதும் மற்ற குறிப்புகளினால் கேஸ் மிகவும் அபாயகரமாகிவிட்டது...ஹார்டு அடிப்பதும் குறைந்துகொண்டே வருவதை யறிந்ததும் கோபம் பொங்கிவிட்டது. வீராவேசம் கொண்டவளைப்போல்...ஊம் உன் னுடைய உத்யோக காகிதத்தை வைத்துவிட்டுப் போய்விடு...போ

...போ ... நிற்காதே...நேற்று இறந்த பெண் கூட நீ சரியாகக் கவனிக்காமையினால்தான் அவ்வாறு நேர்ந்திருக்குமென்று இப்போது தோன்றுகிறது...போய்விடு''...என்று ஆத்திரத்துடன் பிடித்துத் தள்ளிவிட்டாள். எதிரிலிருக்கும் நர்ஸ்களுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

அதில் ஒருத்தி தான் ஏதோ சிபார்சு செய்வதுபோல் பாசாங்குடன் முன்னே வந்து....''டாக்டர்!...டாக்டர்! .. போனால் போறது ... மன்னித்துவிடுங்கள் ... இனிமேல் அப்படியொன்றும் அஜாக்ரதையாக இருக்கமாட்டாள்''...என்று தடபுடலாகக் கூறினாள். இவளையும் மிரட்டியனுப்பிவிட்டு சௌதாமினியைத் தூரத்தியடித்தாள். அந்தோ! சோதனை! சோதனை!! இதை விட வேறு வேதனை வேண்டுமா?...

அவமானமும் விசனமும் அபாரமாகப் பொங்கிவிட்ட சௌதாமினியின் நிலைமையை வர்ணிக்கவும் முடியுமா! உயிரற்ற நடைச்சவம் போலும், நெருப்பின்மீது புழுவெனவும் துடித்தவாறு துவண்டுபோய் நடக்கமாட்டாது நடந்து, ஆஸ்பத்திரியின் கட்டிடத்தைத் தாண்டி பின்பக்கத்துத் தோட்டத்தில் வருகையில் அதற்கு மேல் தாங்காமல் ஒரு மரத்தடியில் மூர்ச்சையாகி விழுந்துவிட்டாள். என்னே பரிதாபம்!

---

## 8—வது அதிகாரம்

### உடைந்த இதயமும் ஊன்றிய அன்பும்

“குழந்தாய்! கோகிலா!...இங்கே வாம்மா!... என் செல்வமே! .... நாகம்மாளுக்கு உடம்பு சரி இல்லை. ஆதலால் அவளால் அக்காவுக்கு காபி எடுத்துக்கொண்டு போக முடியாது. அக்கா தினம் போகும் வாடிக்கை ரிக்ஷா வண்டியிலேயே நீ போய் அக்காவுக்குக் காப்பி

கொடுத்துவிட்டு வருகிறாயா! அக்காவுக்கு காப்பி இல்லாவிட்டால் தலைவலி வந்துவிடும். வேலை செய்ய முடியாது. களைத்துப்போய் விடுவாள். நீ தர்மாஸ்ப்ளாஸ்கில் காப்பி கொண்டுவாம்மா! தைரியமாய்ப் போய் வருகிறாயா!'' என்று கிழவர் அன்போடு கோகிலாவைக் கேட்டார்.

கோகிலா:—ஓ! போய்ட்டு வரேன் தாதா! நீ தனியா இருக்கையே!...

கிழவர்:—அம்மா! எனக்குத் தனி என்ன? என்னை எந்த எமன் கொண்டுபோய்விடுவான்? நீ பயப்படாதே கண்ணே! ஓடிப்போய் காப்பி எடுத்துக்கொண்டு வாம்மா!—என்றார்.

குழந்தைகளுக்கு எங்கேனும் போகவேண்டும் என்றால் குஷிக்குக் கேட்கவேண்டுமா! கோகிலா ஒரே ஓட்டமாக ஓடி காப்பியும் பலகாரமும் எடுத்துக்கொண்டு வந்து "தாதா! போய் ஆஸ்பத்திரி எல்லாம் சுத்திப் பாத்துட்டு அக்காவோடேயே வரட்டுமா?'' என்றாள். அன்று 6 மணிக்கே திரும்பி வரும் நாளாகையினால் அவரும் இசைந்தார். உடனே ஒரு துள்ளு துள்ளிக் குதித்துக்கொண்டே வீதியில் வந்து "அடே சுப்பா! வண்டி கொண்டாடா! ஆஸ்பத்திரிக்குப் போகணும்!'' என்று அதிகாரத்துடன் கூறினாள்.

வண்டியும் வந்தது. சிறு தூறலும் தூறிக்கொண்டே இருந்தது. கோகிலா ஜம்மென்று ஏறி உட்கார்ந்துகொண்டாள். சுப்பனும் வண்டியை இழுத்துக்கொண்டு வழக்கமாக சௌதாமினியை இறக்குமிடத்தில் இறக்கிவிட்டு "கொயந்தெ! மயெயாக்கீது. அதோ அந்த மரத்தாண்டே நானு இருக்கேன். நீ உள்ளாற போயி அக்காளெ இட்டுகினு வந்துட்ரயா?'' என்று கேட்டான். கோகிலா சந்தோஷமாக சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே அப்படியே ஆகட்டுமென்று தலையை ஆட்டிவிட்டு உள்ளே போனாள்.

தன் அக்கா இருக்கும் உள்ளே சென்றாள். அங்கே சௌதாமினி இல்லாததால் அந்த மேஜை மீது காப்பி பலகாரத்தை

வைத்துவிட்டு நோயாளிகளிடம் இருப்பாள் என்று எண்ணி வார்டுக்குள் நுழைந்தாள். ஆஸ்பத்திரியில் கத்தக்கூடாதென்று தெரியுமாகையால் கூப்பிடாமலேயே பார்த்துக்கொண்டே சென்றாள். நோயாளிகள் படுத்திருப்பதும் அவர்கள் ஹா! ஊ என்று முனகுவதும் இவள் சிறுமியாகையால் பார்க்கச் சற்று பயங்கரமாகவே தோன்றியது.

தூரவிருந்தபடியே' சில வார்டுகளைப் பார்த்தாள். தன் அக்காவைக் காணவில்லை யாதலால் அங்கிருந்த ஒரு நர்ஸை நோக்கி "அம்மா! எங்க அக்கா சௌதாமினி எங்கே இருக்கா?" என்று கொஞ்சலாகக் கேட்டாள். இதுகேட்ட நர்ஸு 'எனக்குத் தெரியாது; நான் பார்க்கவில்லை" என்றாள். கோகிலாவின் முகம் சற்று சுளித்தது. அடுத்த வார்டில் நுழைந்தாள்.

அது குழந்தைகளை மட்டும் நம்பருடன் தொட்டிலில் போட்டிருக்கும் வார்டாகையால் அங்கு சென்றதும் குழந்தைகள் மீது மனம் தாவிவிட்டது. ஒவ்வொரு குழந்தையையும் ஏதோ பெரிய ஆச்சரியத்தைப் பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டே சந்தோஷமாகச் சென்றாள். அதற்கு அடுத்தது பரதேசிக் குழந்தைகளை வளர்க்கும் வார்டு. அதில் பல பெரிய குழந்தைகள் கட்டிலிலும் தொட்டிலிலும், கீழே தவழ்ந்தும், ஓடியும் விளையாடிக் கொண்டிருந்ததால் அவைகளைக் கண்டு அப்படியே மெய்மறந்து விட்டாள். மழை சற்று வலுத்ததும் கோகிலாவுக்குத் தெரியவில்லை.

அக்குழந்தைகளில் ஓடும் குழந்தைகளுடன் இவளும் விளையாட்டு காட்டிக் கொண்டே தான் வந்த காரியத்தையே மறந்து விட்டாள். அப்போது ஒரு நர்ஸ் அங்கு வந்து பெரிய குழந்தையை நோக்கி "பாபா! ஒனக்கு காப்பி வோணமா! டீ வோணுமா?" என்றாள்.

இதைக் கேட்ட பிறகே கோகிலாவுக்குப் பழய நினைவு வந்ததும் விழித்துக்கொண்டு......"அம்மா! எங்க அக்கா சௌதாமினி எங்கே இருக்கா தெரியுமா? அவளுக்குக் காப்பி கொண்டுவந்திருக்கேன். எங்கேயோ தேட்ரேன், அவளைக் காணமே"...என்றாள்.

அதற்கந்த நர்ஸு..."சற்று முன்னே தோட்டத்துப் பின் பக்கம் போனுப்போலிருந்தது. ஒரு வேளை அங்கு போயிருக்கலாம்; ஆனால் மழை பெய்கிறதே......வந்திருப்பாளோ என்னமோ பாரு." என்றாள். உடனே கோகிலா எழுந்து தோட்டத்துப் பின் பக்கத்திற்குச் சென்றாள் "அக்கா! அக்கா!" வென்று தோட்டத்து ஒரு மரத்தின் அடியில் நின்று கூப்பிட்டாள். மழை அதிகமாய்ப் பெய்வதால் ஒன்றும் பதிலுமில்லை; வேறு சந்தடியுமில்லை.

அப்போது தான் கோகிலாவுக்கு சற்று பயமும், முகத்தில் மாறுதலும் உண்டாகியது. உடனே மீண்டும் உள்ளே ஓடி ஒரு சுற்று பார்த்து விட்டு தோட்டத்துப் பக்கம் வந்து "அக்கா, அக்கா!" என்று கூவிக்கொண்டே மழையில் நனைந்தபடியே மரத்துக்கு மரம் தாவித் தாவி ஓடினாள். அப்போது ஆஸ்பத்திரியின் வண்ணாத்தி துணி மூட்டைகளை சின்ன கை வண்டியில் போட்டு அதன் மேல் மெழுகு சீலையைப் பிரித்துவிட்டு அந்த வண்டியைத் தானே தள்ளிக்கொண்டு வருகையில் அங்கு மரத்தடியில் சௌதாமினி விழுந்து கிடப்பதையும், அந்த கோர பரிதாபகரமான காட்சியையும் கண்டு திடுக்கிட்டு வண்டியை நிறுத்திவிட்டு "யம்மா!...யம்மா!... நர்ஸம்மா......நர்ஸம்மா!"...என்று கத்திய குரலை கோகிலா கேட்டதும் அங்கு ஓடினாள்.

தன் அக்கா அங்கு விழுந்து கிடக்கும் கண்ராவியைப் பார்த்ததும் "அக்கா! அக்கா!"......என்று பெரிதாகக் கூவியவாறு அவள் முகத்தோடு முகம் பதித்துக் கொண்டாள். மழையில் மரத்திலிருந்து கொட்டும் ஜலத்தாலும், கீழே ஓடும் வெள்ளத்தாலும் சௌதாமினி நனைந்து தெப்பம்போல் மிதந்து கொண்டிருந்தாள். அவள் விழுந்த வேகத்தினாலும், மனக்கவலையின் ஷாக்கினாலும் சவம்போலாகி விட்டாள்.

கோகிலா "அக்கா! அக்கா!" வென்று கதறுகிறாள். வண்ணாத்தியும் "யம்மா! நர்ஸம்மா! எம் இப்பிடி உயிந்திட்டிங்க......இதோ பாருங்க......மயெ பேயுதுங்களே ...... எயுந்திருங்க......அம்மா

அம்மா!......என்று கூப்பிட்டவாறு மெல்ல செளதாமினியைத் தூக்கினாள். இதற்குள் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த சிலரும் அங்கு ஓடி வந்து விட்டார்கள். வண்டிக்கார சுப்பனும் இங்கு என்ன கூட்டமோவென்று ஓடி வந்தான். இந்த சம்பவத்தைப் பார்த்து, "ஐயையோ! எங்கம்மாளுக்கு இன்னு ஆபித்து வந்திடுச்சி......யம்மா! யம்மா......எயுந்திருங்கம்மா...... என்று கத்துகிறான்.

வண்ணாத்தி "நான் உள்ளே போய் டாக்டரம்மாளெ இட்டுனு வாரேன்......இல்லாங் காட்டிப்போனு உள்ளாற தூக்கிகினு போவலாம்'' என்று கூறியபடியே மெல்லத் தூக்க முயன்றான். அப்போதே சற்று தெளிவு பெற்ற செளதாமினிக்கு இவர்கள் கூறிய வார்த்தைகள் மட்டும் கிணற்றிலிருந்து கேட்பது போல் கேட்டன. சற்று தன்னைச் சமாளித்துக் கொண்டு வேண்டாமென்று கையைக் காட்டினாள்.

கோகிலா "அக்கா! அக்கா!...இதோ பாரு......இதோ நான் வந்திருக்கேன்.......காப்பி இல்லாதெ மயக்கமாப் பூட்டுதா''...... என்று ஓட்டமாக ஓடி காப்பியை எடுத்து வந்து செளதாமினியின் வாயில் வார்த்தாள்...செளதாமினி கண்ணைத் திறந்து பார்த்தாள். இதற்குள் உள்ளிருந்து சில நர்ஸுகளும் வந்து விட்டார்கள். மழை சற்று ஓய்ந்தது.

பொறுமை கொண்ட நர்ஸுகள் தூர நின்றபடியே இதைக் கவனித்துக் கொண்டிருப்பதை யாரும் பார்க்கவில்லை.

மற்ற நர்ஸ்கள் "ஏன் செளதாமினிக்கு என்ன?...இதோ பாரு. செளதாமினீ!ஸ்ட்ரெசர் கொண்டுவந்து உள்ளே எடுத்துப் போகிறோம். ஏன் இப்படி விழுந்துவிட்டாய்?...உனக்கு உடம்பு என்ன?...என்று அன்போடு கேட்டார்கள்.

செளதாமினிக்கு யாருக்கும் பதில் கூறவே முடியவில்லை. நடந்த விஷயங்கள் முற்றும் ஞாபகத்திற்கு வந்துவிட்டன. கண்ணீர் பெருகத் தவித்துக்கொண்டு நிற்கும் தன் சகோதரியைக் கண்டதும்

இன்னும் துக்கம் அதிகமாகிவிட்டது. தேகம் குலுங்கியவாறு "கண்ணே! கோகிலா! .. கோகிலா!...நீ எங்கு வந்தாய்!...எப்போது வந்தாய்?"...என்று கூறிக்கொண்டே அவளைத் தழுவிக் கட்டிக் கொண்டாள்.

மற்ற நர்ஸ்களைப் பார்த்து ... "ஸிஸ்டர்ஸ்! .... மன்னிக்க வேணும். எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. ஏதோ கொஞ்சம் மயக்கமாக வந்தது, விழுந்துவிட்டேன்...சுப்பா!...ஏன் அழுகிறு யப்பா! நான் செத்துவிடுவேன் என்று பார்த்தாயா! ஊம்...காடெல் லாம் எலும்பாகி விடுமோ!...அப்படிக்கெல்லாம் நல்ல காலம் வராது. பயப்படாதே!...வண்டியைக் கொண்டு வா!''...என்றாள்.

கோகிலா அக்காவைக் கட்டிக்கொண்டு "ஏன் விழுந் தூட்டே?....ஒனக்கு ஒடம்புக்கென்ன?''...என்று கேட்டாள். சௌதாமினி மெல்ல எழுந்து வண்டியிலமர்ந்து மற்றவர்களை நோக்கி "எனக்கு ஒன்றும் உடம்பில்லை. நான் வீட்டுக்குப் போகி றேன்'' என்று அவமானமும், துக்கமும் பாதித்தவாறு கூறிவிட்டுத் தங்கையுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

இவளுடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்டு மன முடைந்துபோய் விட்ட கிழவர் தட்டித் தடுமாறியவாறு எழுந்து வந்து சௌதாமினியின் ஈர உடையையும், கோரக்காட்சியையும் கண்டு சகியாது துடித்தவாறு, "குழந்தாய்!...சௌதாமினீ!...ஏன் புலம்புகிறாய்?...ஏன் இப்படி உன் சரீரம் நனைந்து நடுங்குகிறது? கோகிலா! என்ன நடந்ததம்மா?'' என்று பதறியவாறு சௌதா மினியின் தலையைத் தடவினார்.

கோகிலா உள்ளே ஓடிச்சென்று சவுக்கம், புடவை, ஜாக்கெட்டு எல்லாவற்றையும் கொண்டுவந்து சௌதாமினியின் தலையை சவுக் கத்தினால் துடைத்தபடியே "அக்கா!...அக்கா! உலர்ந்த புடவை கட்டிக்கோ. உள்ளே வா!''...என்று மெல்ல கையைப் பிடித்து இழுத்தாள். இதற்குள் ரிக்ஷாக்கார சுப்பன் கண்ணீர் பெருகியவாறு "சாமீ! கொயந்தெக்கி திடீன்னு மயக்கம் வந்திடுச்சிங்களாம்.

அப்பிடியே கொட்ற மயெலே தோட்டத்துலே உயிர்து கெடந்திச் சுங்க, கண்ணுலெ பாக்க முடியல்லெங்க'' என்றான்.

கிழவரின் வயிறு பகீரென்றது. கண்ணில் தாரை தாரையாக கண்ணீர் பெருகிவிட்டது. சௌதாமினி புடவையைக் கட்டிக் கொண்டு பெஞ்சியில் படுத்துவிட்டாள். "தாதா! கலங்காதேங்கோ! எனக்கு உடம்பு ஒன்றுமில்லே...ஆனால் பேச முடியவில்லை. பிறகு எல்லாவற்றையும் சொல்லுகிறேன். மனிதரின் நிழல் மனிதரை விட்டுப் போகாதல்லவா? அதுபோலத்தான் யாவும் நடக்கும். இதில் கவலைப்பட்டு உபயோகம் என்ன?''...என்று மெல்லக் கூறிவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டாள். ஆனால் வழிந்தோடும் கண்ணீரை அவளால் அடக்க முடியவில்லை.

கிழவரும் விஷயம் விளங்காமல் அப்படியே இடிந்துபோய் சௌதாமினியின் பக்கத்தில் கண்ணீர் பெருக உட்கார்ந்துவிட்டார். அவருடைய மூளையே சிதறிவிடும்போல் ஏதேதோ பழங் கதைகள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்துவிட்டன. தலையில் கையை வைத்துக் கொண்டு தம்பித்துவிட்டார். கோகிலா அக்காவைத் தடவியவாறு "அக்கா!...நான் ஒரே நிமிஷம் ஓடிப்போய் நம்ப டாக்டரை அழைச்சுண்டு வரட்டுமா? தாதா! நான் போகட்டுமா?''...என்று கெஞ்சியவாறு கேட்டாள்.

சௌதாமினி பதறியவாறு கோகிலாவின் கையைப் பிடித்துக் கொண்டு, "கோகிலா! வேண்டாம்; போகவேண்டாம்...எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. நான் சாகமாட்டேன். இன்னும் சற்றுநேரம் சென்ற பிறகு சரியாகிவிடும். நீ வீணு கலாட்டா பண்ணுதே... எனக்குக் கோபம் வரும்...தாதா! அவளையனுப்பவேண்டாம்''... என்று சற்று படபடப்பாகவே கூறினாள். கோகிலாவின் மனம் மட்டும் இதைக் கேட்டுச் சமாதானமாகவில்லை. எனினும் அக்காவின் ஆக்கினையை மீற அவளுக்குப் பயமாயிருந்ததால் அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

கிழவர் சௌதாமினியின் நிலைமையைக் கண்டு உண்மை யாதென விளங்கவில்லை எனினும் ஏதோ பெரிய விபரீதம் நடந்து

விட்டது என்று மட்டும் தெரிந்துகொண்டார். சௌதாமினியைத் தடவியபடியே, "குழந்தாய்! விஷயத்தையறியாது என் மனம் பதைக்கிறது. நம்முடைய விதிதான் நமக்குத் தெரிந்திருக்கிறது. இதை மூடி வைப்பதில் பலன் என்ன?..நடந்த வரலாற்றைக் கூறிவிடு. ஏன் தியங்குகிறாய்?'' என்று மெல்ல கேட்டார்.

இதைக்கேட்ட சௌதாமினி கண்ணீர் பெருகியவாறு கிழவரின் கையைப் பிடித்துக்கொண்டு "தாதா! வெட்டவெளியான நம்முடைய பிழைப்பிற்கு மறைப்பதும் ஒளிப்பதும் வேறு வேண்டுமா? ...என்னை ஆஸ்பத்திரி வேலையிலிருந்து தள்ளிவிட்டார்கள். துஷ்டர்களின் பிரார்த்தனை நிறைவேறிவிட்டது.'' என்று கூறமுடியாது கூறினாள்.

கிழவர் :—ஐயோ!...நினைத்தபடியே முடிந்துவிட்டதா ...... சௌதாமினீ!...என்ன காரணத்தை வைத்துத் தள்ளிவிட்டார்கள்? அந்த துஷ்ட நர்ஸ்கள் என்ன செய்தார்கள்?...

சௌதா :—அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று நினைத்திருந்தார்களோ அம்மாதிரி செய்துவிட்டார்கள். இனி வேறு என்ன வேண்டும்? நான் நர்ஸ் தொழிலுக்கே லாயக்கற்றவள் என்று பெரிய டாக்டர் பலர் முன்னிலையில் கூறிகேவலமாகப் பேசித் துரத்தியது ஒன்று போதாதா!...இனி நமக்கு பிழைப்பதற்கும் வழி யற்றுவிட்டது. (நடந்ததைக் கூறி) இப் பாவிகள் இம்மாதிரி சூழ்ச்சி செய்து இத்தனை விபரீதத்திற்குக் கொண்டுவந்து விடுவார்களென்று நான் நினைக்கவே இல்லை. எல்லாம் என் விதி.... தாதா...மகா பாவியாகிய என் பொருட்டுத் தாங்கள் ஆயுள்கால பரியந்தம் கஷ்டப்படுகிறீர்களே!...இதை நான் எப்படி சகிப்பேன். நம் மிருவருடைய ஜீவநாடியைப் பிடித்துக்கொண்டிருக்கும் குழந்தை கோகிலாவை எப்படி வ்ருத்திக்குக் கொண்டு வருவது? என்னால் அவளுக்குமல்லவோ துன்பம்...என்று கவிழ்ந்து படுத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கிவிட்டாள்.

மழையோ ஜோவென மீண்டும் கொட்டுகிறது. மழைக்குப் போட்டி இடுவதுபோல் சௌதாமினியின் கண்களும் மழை பொழி

கின்றன. அவர்களின் நிலைமையில் அச்சமயம் கோகிலாவைப்பற்றிக் கவனிக்கவில்லை. ஒரு நிமிடம் சமாளித்த கிழவர் கோகிலா தன்னருகிலில்லாததை கவனித்து "கோகிலா! கோகிலா!" என்று கூப்பிட்டார்.

அப்போது கொட்டும் அசாத்ய மழையில் இவர் குரல் எப்படி காது கேட்கும்? கிழவர் மட்டும் மெல்ல எழுந்து தடிக் கொம்பை ஊன்றியபடியே வீதியில் வந்து பார்த்தார். அவளைக் காணவில்லை. மழை அதிகமாகப் பெய்வதால் வீதியில் சென்று அண்டை வீட்டிலிருக்கிறுளோ வென்று விசாரிக்கவும் முடியாது போய்விட்டது. அடுத்த வீட்டில்தான் எப்போதும் அவள் விளையாடுவது வழக்கமாகையினல் அப்படிப் போயிருக்கலாம் என்று தெரிந்துகொண்டு உள்ளே வந்தார். அப்போதும் சௌதாமினி அதே நிலைமையில் புலம்பிக்கொண்டு படுத்திருக்கும் காட்சி கிழவரின் நெஞ்சைப் பிளந்தது. குன்றிப்போய் அவள் பக்கத்தில் உட்கார்ந்தார்.

---


# சாந்தகுமாரி

"வாழ்வாவது மாயம் மண்ணுவது திண்ணம்" என்னும் ஜீவிய ரகஸியத்தை நன்கு எடுத்துக் காட்டும் நவீனம். தற்கால வாழ்க்கையின் உன்னத சித்திரம்.........உலக விநோதம்......... க்ரோதப் புயலும், காதல் சுழலும்......கோபத்திற்கு முன் பாபமுமுண்டோ?......சண்டாளச் செய்கையின் சங்கட விளைவுகள்... அன்பின் வேகம் ஆற்றையும் கடக்கும்...பிரேமையின் ஜோதி... முற்றும் வியக்கும் சரிதை......உயரிய படக்காட்சிக்கு உகந்த நாவல், பல பாஷைகளில் மொழி பெயர்த்து புத்தகமாகவும், படமாகவும் வெளிவரத் தகுந்த இணையிலாக் கதைப் போக்கு. தமிழர் பெருமை படக்கூடிய புத்தகம்.

விலை. ரூ. 1. சந்தா நேயர்களுக்கு அணு. 14

## 9-வது அதிகாரம்

## கடலுக்கும் காதலுக்கும் கரைதானுண்டோ?

ஹரிநாத்தின் மனத்திற்குள் அழுந்திக்கிடக்கும் விசனம் சௌதாமினி ஒருத்தியைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அதைத் தெரிந்து கொள்ளும்படி நடக்கவுமில்லை. சௌதாமினி கொடுத்த விவாகப் பரிசான கைகுட்டைகள் அவன் கண்ணீர் துடைக்கும் கருவியாயமைந்தன. தன் கஷ்டங்களை உள்ளடக்கிக்கொண்டு ஊர்மிளாவுடன் எவ்விதமான வித்யாசமும் இல்லாமல் நடந்து வருகிறான். ஆனால் ஊர்மிளாவின் டாம்பீக நடத்தையும், அவளுடைய அசட்டு தைரியமும் ஹரிநாத்தின் மனத்திற்குச் சற்றும் பிடிக்கவில்லை.

தன்னுடைய சுயேச்சையாகத் திரிய விட்டுச் செல்லங் கொடுத்து வளர்த்து விட்ட அவளுடைய பெற்றோருக்கே இப்போது அவள் நடத்தை பிடிக்காமல் கண்டித்துப் பார்த்தும் பயனில்லாது சலித்து விட்டதால்தான் சீக்கிரத்தில் விவாகத்தை நடத்திக் கட்டுப்பாடு உண்டாக்கிவிட்டால் நல்லதென்று அம்மாதிரி செய்துவிட்ட பின்னர் அவர்களுடைய பாரம் குறைந்ததாக எண்ணினர்கள்.

வாரத்திற்குக் குறைந்தது நாலைந்து டாக்கிகளுக்காவது போகாவிட்டால் அவளுக்கு ஏதோ பெரிய நஷ்டம் ஏற்பட்டு விட்டது போன்ற விசனம் உண்டாகிவிடும். தாய் தந்தையோ மற்ற வேலைக்காரியோ, குமாஸ்தாவோ அண்டை அயல்வீட்டுத் தெரிந்தவர்களோ, எவர்களுடனும் சற்றும் தியங்காமல் கிளம்பிவிடுவாள். கல்யாணம் ஆனபிறகும் அவ்வாறே தைரியமாகச் செய்வதானது ஹரிநாத்திற்கு சற்றும் பிடிக்கவில்லை. ஆனால் அவளைக் கண்டிக்கவோ, தடுக்கவோ அவன் விரும்பவில்லை.

ஹரிநாத்தை ஊர்மிளா சினிமாவுக்குப் பல தரங்களில் அழைத்து பலவந்தம் செய்தபோது தனக்கு சினிமாவே பிடிக்க வில்லை என்றும், ஒன்றிரண்டு காட்சிகள் பார்க்கப் பிடிப்பதாயினும் போவதற்கு அவகாசம் ஏற்படவில்லை என்றும், சினிமாவுக்கே இப் படி நேரத்தைக் கழிப்பது தனக்குச் சற்றும் பிடிக்கவில்லை என்றும் தன் கருத்தை வெளியிட்டுவிடுவான். இதனால் ஊர்மிளாவுக்கு அசாத்திய கோபம் வந்து சற்று முகத்தாலடிப்பாள். "உங்களுக் குப் பிடிக்கவில்லை என்றால் ஒருவருக்கும் பிடிக்காது போய்விட வேண்டுமா? உங்களுக்கு ஓய்வில்லை என்றால் வரவேண்டாம்...... நானும் அதற்காக அடைபட்டுக்கிடக்கவேண்டுமா?'' என்று எதிர்த் துப் பேசுவாள்.

இதற்குப் பதில் சொல்ல ஹரிநாத்திற்குப் பிடிக்காமல் மவுனம் சர்வார்த்த சாதகம் என்று பேசாதிருந்துவிட்டான். மழையோ ஜோவென்று கொட்டுகிறது. ஊர்மிளா ஜோராக அலங்காரம் செய்துகொண்டு கொட்டும் மழையிலும் சினிமாவுக்கு கிளம்பிவிட்டாள். இவள் தன் வார்த்தையில் லக்ஷ்யமின்றி வெகு முடுக்காயும் ஜோராயும் செல்வதைப் பார்த்த ஹரிநாத்திற்கு மனம் பதறியது..."உம்...வேண்டுமென்று காலில் கட்டிவிட்டபோதிலும் என் மனத்திற்கு த்ருப்தியாகவாவது நடந்துகொள்ளக்கூடாதா!

இவளுடைய காலத்தை இம்மாதிரி வீணுக வியர்த்தம் செய்வதை விட்டு என் தொழிலுக்கு உபகாரமான நர்ஸ் வேலை யாவது படித்தும், பழகியும் பயன் தரலாகாதா!... ஊம்...கழுதைக் குக் குதிரை வேஷம் போட்டதுபோலல்லவோ இது இருக்கும்.... என் மனம் அவ்வகையில் கோரிய கோரிக்கை ஈடேறும் பாக்யம் நான் செய்திருப்பின் என்னருமைக் கண்மணி சௌதாமினியை நான் அடைந்திருக்கமாட்டேனு! காரணமில்லாத இடத்தில் காதலை உண்டாக்கி வளர்த்து வதைப்பது, காரணத்துடன் மணக்கும் இடத்தில் கசப்பை உண்டாக்கிக் கசக்குவது... என்னே விதி செய்யும் கூத்து...என்னே விதியின் வலிமை....சௌதாமினீ! நீயும் நானும் இவ்விதம் பிரிந்து பரிதபிப்பதற்காகவா கடவுள் நம்மிடையே அபரிமிதமான அன்பையுண்டாக்கிப் பின்னர் பிரித்துத் துன்பத்தில்

தள்ளிவிட்டார்!'' என்று நினைத்துக் கலங்கி உட்கார்ந்திருக்கும் சமயம் டெலிபோன் மணி அடித்தது.

''ஹல்லோ!...ஹல்லோ!...கிருஷ்ணசாமி முதலியாரா! ஓகோ! என்ன சமாச்சாரம்!...என்ன 105 டிகிரியா!...நீங்க ஐஸ் வாங்கி வையுங்கள்...நான் இப்போதே வருகிறேன்.'' என்று கூறிவிட்டு உடனே மருந்துகளுடன் தன் காரில் புறப்பட்டான். மழையோ ஜோவென்று கொட்டுகிறது. குறித்த இடத்திற்குச் சென்றான்.

உள்ளே இருந்து மெல்ல வாசலுக்கு நழுவி விட்ட கோகிலா கவலையோடு வீதியிலேயே நின்றிருந்த சமயம் அந்தப் பக்கமாக டாக்டரின் கார் அதி வேகமாகப் போனதைப் பார்த்துவிட்டாள்...... வீதியில் நின்றபடியே ''ஹா...அதோ!...அதோ....டாக்டர் மாமா போறார்...என்று துள்ளிக் குதித்தவாறு வீதியின் குரட்டு நுனியில் நின்று எட்டிப் பார்த்தாள்.

அத்தெருவின் கோடியில் ஒரு வீட்டில் கார் நின்றதும் உடனே கோகிலா முன்பின் யோசிக்காமல் மழையில் நனைந்துகொண்டே ஓரே ஓட்டமாக ஓடி காருக்குள் உட்கார்ந்து ஹரிநாத்தின் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். டாக்டர் உள்ளே சென்று சிகித்சை செய்துவிட்டு வெளியே வந்து காரில் ஏறும்போது கோகிலா காரில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஆச்சரியத்துடன் ''கோகிலா... எம்மா! அழுகிறாய்! என்ன சமாச்சாரம்....மழையில் நனைந்துகொண்டு எங்கே வந்தாய்? என்று அன்போடு கூறியபடியே கோகிலாவின் தலையைத் தன் கைகுட்டையினால் துவட்டியபடியே பக்கத்தில் அமர்ந்தான்.

கோகிலா கண்ணீர் வழிய பெருமூச்சு துரத்தப் புலம்பிய படியே ஹரிநாத்தின் கையைப் பிடித்துக்கொண்டு....''மாமா...அக்கா கிட்டெ நான் ஓங்களெ பாத்ததா சொல்லாதெங்கோ...அக்காக்கு ஒடம்பு சரியில்லே. ஆஸ்பத்திரிலே அப்படியே தலை சுத்தித்தாம். மயக்கம் வந்துதாம். மழை பேயறதுகூட தெரியாமெ தோட்டத்திலே தனியா உழுந்துட்டா மாமா......

ஹரிநாத்:—இடை மறத்து ஆவேசத்துடன்......என்ன!...... என்ன!...மயக்கம் போட்டு விழுந்தாளா...ஐயயோ...ஏன் அப்படி விழுந்தாள்? ஏதேனும் காயம் பட்டு விட்டதா...வீட்டிலிருக்காளா! ஆஸ்பத்திரியிலிருக்கிருளா...

கோகி :—நான் ஆஸ்பத்திரிக்கு காப்பி கொண்டுபோனேன் மாமா...தோட்டத்துலெ வுழுந்து கடந்ததெ பாத்து ஒடனே ஆத்துக்கு அழைச்சுண்டு வந்தூட்டேன்......தாதாவும் அக்காவும் கேவி கேவி அழுதா னேக்கு ஒன்னும் தெரியலே...ஒங்களே அழைச்சூண்டு வறேன்னு அக்கா வாண்டவே வாண்டான்னு என்னைத் தடுத்து மிரட்டினு. நான் பேசாதெ வாசல்லே அழுதுண் டிருக்கச்செ நீங்க போறதைப் பார்த்தேன்...நான் சொன்னதா தெரியவாண்டாம்...எங்க அக்காவெ பாத்தா பயம்மா இருக்கு மாமா ...என் அக்காவை வந்து பாத்து நல்ல மருந்து குடுத்து உடம்பை தாவளேபண்ணுடுங்கோ மாமா...என்று கூறிக்கொண்டே சகோதரி யினிடமுள்ள வாஞ்சையினுல் விக்கி விக்கி அழுது விட்டாள்.

ஹரிநாத்தின் இதயம் எப்படித்தான் இருக்கும்!...அதைக் கூறவும்வேண்டுமா? பச்சிளங் குழவியாகிய கோகிலாவுக்கு இவர் களின் இதயத் துடிப்பு தெரியுமா, அன்றி சொல்லத்தான் முடியுமா? ...ஹரிநாத்துக்கு உலகமே இருண்டுவிட்டதுபோ லாகிவிட்டது ஒரு க்ஷண நேரம் தம்பித்துவிட்டான். அவனுல் வாய் திறந்து பேசவே முடியவில்லே. கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகு கிறதை கோகிலா உற்று கவனித்து விட்டாள். அவளுடைய கலக் கம் இன்னும் அதிகரித்து விட்டது. "ஏன் மாமா ஒங்க கண்ணுலே ஜலம் வரது? அக்காவெ வந்து பாக்கமாட்டங்களா..........அக்கா ஒங்களேக் கூப்பிட வாண்டான்னதால் கோபம் வந்தூட்டுதா... ...என்று கேட்டு அவன் முகத்தையே உற்றுப் பார்த்தாள்.

ஹரிநாத் அப்போதும் பதில் கூற முடியாமல் திகைத்த படியே தன் கண்களைத் துடைத்துக்கொண்டு "இல்லெ கோகிலா!... உன்னுடைய அக்காவிடம் நீ எத்தனை ப்ரியமாக இருக்கிறுய் என்ற தைப் பார்க்க எனக்கு ஆனந்தக் கண்ணீர் வந்து விட்டது.

வேறொன்றும் இல்லை. நீ என்னோடு காரில் வந்தால் உன் அக்காவுக்குத் தெரிந்துவிடாதா...... உன்னைத் திட்டினால் என்ன செய்வாய்?'' என்றான்.

கோகிலா:—மாமா!......நான் ஒங்களோடே கூட வரமாட்டேன். இங்கேந்து ஓட்டமா ஓடி அதோ அந்த கோவுலுக்குப் போயி சாமியை ப்ரதக்ஷணம் செய்து அக்காவுக்கு ஒடம்பு குணமாகணு முன்னு வேண்டிக்கொண்டு ஓடி வந்தூடறேன். நீங்க மட்டும் வீட்டுக்குப் போய் அக்காவெ பாத்து மருந்து கொடுங்கோ மாமா.........என்று சமத்காரமாகவும், தைரியமாகவும் கூறிக் கொண்டே காரிலிருந்து இறங்கி மழையில் நனைந்து கொண்டே கோயிலை நோக்கி புள்ளிமான்போல் துள்ளி மறைந்து விட்டாள்.

ஹரிநாத்தும் அவளுடைய தைரிய வேகத்தையும், மனோ வேகத்தையும் கண்டு ப்ரமித்துப் போய் விட்டான். தன் விவாகத் தன்று பார்த்த பிறகு இது பரியந்தம் சௌதாமினியைப் பார்க்கவே இல்லை யாகையால் இன்று திடீரென்று சென்றால் என்ன நினைப் பாளோ! என்ன சொல்வாளோ!...என்ற திகிலும் ஒரு புறம் எழுந்து வதைக்கின்றது......''சரி...கடவுள் விட்ட வழியாகட்டும்'' என்ற தைரியத்துடன் காரைத் திருப்பி விட்டான்

காதல் தீ யொருபுறம் வாட்டி வதைக்கின்றது. சௌதா மினிக்கு என்ன நேர்ந்து விட்டதோ! என்கிற கவலை யொருபுறம் இதயத்தைப் பிளக்கின்றது பார்க்க வேண்டு மென்கிற ஆவல் அபாரமாக எழுந்து போராடுகின்றது இன்னிலைமையில் சௌதா மினி வீட்டு வாசலில் காரை நிறுத்திவிட்டு மெல்ல உள்ளே வந்தான். உள்புறம் கூடத்தில் சௌதாமினி படுத்துக் கொண்டு தேகம் குலுங்கப் புலம்புகிறாள். கிழவரும் கண்ணீர் வழிய சௌதா மினியைத் தடவியவாறு பேசமாட்டாமல் உட்கார்ந்திருக்கிறார்.

ஹரிநாத் சற்று தூரத்திலிருந்தே இந்த பரிதாபகாமான கோரக் காட்சியைக் கண்டு சகிக்கமாட்டாது தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே சுவருடன் சாய்ந்து விட்டான். கண்ணீர்த் துளிகள் அவனது அழகிய கண்ணாடிபோன்ற கன்னங்களில்

வழிந்து உடைந்தோடின. சில வினாடிகள் ஒன்றுந் தோன்றாமல் அப்படியே அசைவற்று நின்றான். பிறகே சிறிது தெளிவு பெற்று கண்ணைத் துடைத்துக் கொண்டு செளதாமினியின் அருகில் வந்து தனக்கு ஒன்றுமே தெரியாதவன்போல் "தாதா! என்ன சமாச்சாரம்...செளதாமினிக்கு என்ன உடம்பு?"...என்று விசனமே நிறைந்த பார்வையுடனும், குரலுடனும் கேட்டான்.

இவ்வுலக சிந்தையே இல்லாது சமாதியில் ஐக்கியமானவர் போல் உட்கார்ந்திருந்த கிழவர் இந்த குரலைக் கேட்டதும் கண்ணைத் துடைத்துக் கொண்டே அடங்காத ஆச்சரியத்துடன் "டாக்டர்வாள்!......ஏது! இத்தனை தூரம் தாங்கள் வந்தது? உட்காருங்கள்" என்றார். செளதாமினியும் அதே சமயம் மெல்ல தலையைத் தூக்கிப் பார்த்தாள் அடுத்த நிமிடமே குப்புறப் போட்டுவிட்டாள். செளதாமினி பார்த்த அந்த பார்வையின் வேகம் ஹரிநாத்தின் உயிரை அப்படியே கவ்விக்கொண்டு அவனை வெற்று உடல் போலாக்கிச் சென்றதென்றே கூறலாம்.

தத்தளிக்கும் நிலைமையில் தன்னையே மறந்த ஹரிநாத் "செளதாமினீ!.....செளதாமினீ!" என்றான். அதற்குமேல் தொண்டையை அடைத்து விட்டது இதற்குள் கிழவர் மெல்ல பேசத் தொடங்கி "டாக்டர்! உட்காருங்கள். கொட்டுகிற மழையில் எங்கே புறப்பட்டீர்கள்? கோகிலா உங்களை அழைத்தாளா?" என்றார்.

ஹரி:—இல்லையே! கோகிலாவை நான் பார்க்கவே இல்லை. நானே இந்த தெருவில் ஒரு வீட்டிற்கு, கேஸ் விஷயமாக வந்தேன். செளதாமினிக்கு உடம்பு சரி இல்லை என்று அந்த வீட்டில் பேசிக் கொண்டார்கள். அதைக் கேட்டதும் பார்த்துவிட்டுப் போகலாமென்று நானாகத்தான் வந்தேன். என்ன உடம்பு? குழந்தை கோகிலா எங்கே?" என்று பொருத்தமாகக் கேட்டான்.

இதையே உண்மைஎன்று நம்பியகிழவருக்கு "இந்த கொட்டும் மழையில் குழந்தை எங்கே போயிருக்கும்? அல்லது இவளுக்கு இத்

தகைய தீங்கை இழைத்த பாவி நர்ஸுகள் குழந்தையையும் ஏதேனும் செய்துவிட்டார்களோ?'' என்கிற பயம் திடீரென்று உதித்துவிட்டது. "ஆனால் நீங்கள் குழந்தையைப் பார்க்கவே இல்லையா!'' என்று ஒருவிதமான பீதியுடனும், கவலையுடனும் கேட்டார்.

ஹரி :—இல்லையே!.... எங்கு போயிருப்பாள்?... என்றான்.

கிழவர் கவலையுடன் "கோகிலா! கோகிலா!'' என்று கூப்பிட்டார். மறுபடியும் வீதிக்குச் சென்று சுற்றுமுற்றும் பார்த்தார். மழையோ நிற்கவே இல்லை கிழவரின் மனது கலங்க வாரம்பித்து விட்டது. அவர் வீதிக்குச் சென்று திரும்பி வருவதற்குள் ஹரிநாத் சௌதாமினியின் தலையை நிமிர்த்தி "சௌதாமினீ!........ இதென்ன பரிபவம்!....ஏன் இப்படிப் புலம்புகின்றாய்? என்ன நடந்தது?'' என்று மிகவும் வாஞ்சையுடன் கேட்டான்.

சௌதாமினியின் வாய் பேசவே இல்லை. கண்கள் மட்டும் மடை திறந்துவிட்டன. அதே விழிகளுடன் ஹரிநாத்தைப் பார்த்தாள். அடுத்த நிமிடமே கண்ணை மூடிக்கொண்டு குப்புறப் படுத்தபடியே, "டாக்டர்! என் பிறவியில்தான் ஈசன் கல்லைப் போட்டுவிட்டான் என்று நினைத்தேன்....என் பிழைப்பிலும் பெரும் பாறையைப் புரட்டிவிட்டான்....என் விஷயத்தில் கடவுளுக்கும் இரக்கமில்லாது போய்விட்டது'' என்று கூறும்போது அவளால் தாங்கமாட்டாத துக்கம் பொங்கிவிட்டதால் பேச்சு நின்றுவிட்டது.

இதற்குள் வீதியிலிருந்து கிழவர் வந்துவிட்டார். 'டாக்டர்! இன்னும் ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள். பொறாமைப் புயல் காற்றுக்கு முன்பு எதுதான் நிற்க முடியும்...குழந்தை சௌதாமினிக்கும் இத்தகைய கதி வரும் என்று நினைக்கவே இல்லை. இத்தனை பழக்கமும், ப்ரியமும், நம்பிக்கையுங்கொண்டிருந்த பெரிய டாக்டரே ஒரு நொடியில் பல பேர் முன்பு கடிந்து பேசித் துரத்திவிட்டார்களாம். அந்தப் பாவி நர்ஸ்கள் செய்த சதியாலோசனை விளைவின் பலனைப் பார்த்தீர்களா!

ஹரி :—என்ன! என்ன! பெரிய டாக்டரா வேலையை விட்டுத் தள்ளிவிட்டார்கள்!...அம்மாதிரியான சம்பவம் என்ன நடந்துவிட்டது?"—என்றான். கிழவர் சௌதாமினி கூறியதை அப்படியே கூறினர். இதைக் கேட்ட ஹரிநாத்தின் மனம் துடித்தது...இப்படியா செய்தார்கள்? அட அனியாயமே....என்று சற்று நேரம் தம்பித்துவிட்டான். சௌதாமினியின் கண்ராவியைச் சகிக்க முடியவில்லை.

சௌதாமினி சோகாவேசத்துடன் எழுந்து உட்கார்ந்து புலம்பியபடியே "டாக்டர்!...டாக்டர்!......என்னைத் தள்ளிவிட்டதற்கு நான் அழுவேனு! பலர் முன்னிலையில் அவமானப் படுத்தியதற்கு அழுவேனு! என் தொழிலுக்கே பங்கம் வந்துவிட்டதற்கழுவேனு! தள்ளாத கிழவரையும் பச்சிளங் குழந்தையையும் எவ்வாறு காப்பாற்றுவேன் என்பதற் கழுவேனு.......இம்மாதிரி பெரிய டாக்டரே குற்றங் கண்டுபிடித்து தள்ளிவிட்டதால் எனக்கு தனிப்பட தொழில் நடத்த நற்சாக்ஷிப் பத்திரமும் கொடுக்கமாட்டார்கள்; பொது மக்களும் நம்பமாட்டார்கள் என்ற விசனத்தை எண்ணியழுவேனு! நான் எதற்கென்றுதான் விசாரப்படுவேன்? எவ் விதந்தான் இனிமேல் பிழைப்பேன்....என் கதி அதோகதியாகிவிட்டதே!" என்று கதறினுள்.

ஹரி.—(பெருகும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே) சௌதாமினீ! இதைக் கேட்கும்போது என் மனமே பதறித் தவிக்கையில் உன் மனம் படும் பாட்டைக் கூறவேண்டுமா!...இத்தனை தூரம் செய்த நர்ஸுகள் என்றுமே சுகப்பட்டுவிடுவார்கள் என்று நினைக்காதே....கடவுள் எல்லோரையும் சமமாகப் பார்த்துக்கொண்டு தானிருக்கிறுன்......மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான். பயப்படாதே...கடவுளை நம்பி இரு. நான் உனக்கு இதை விட வேறு என்ன சொல்ல முடியும்...என்றுன். அதற்குமேல் அவனுல் பேச முடியவில்லை.

அதே சமயம் கோகிலா நனைந்துகொண்டே சந்தோஷமாக ஓடி வந்து "அக்கா அக்கா!...இந்தா ஸ்வாமி விபூதி, குங்குமம்...

துளசி, புஷ்பம்...எல்லாம் வாங்கிக்கோ! ஒடம்பு இப்பவே குணமாயுடும். ஒனக்கு சீக்கிரம் உடம்பு குணமாகணும்னு கோவுலுக்கு ஓடிப்போய் ச்வாமியை ப்ரதக்ஷணம் செய்துட்டு ப்ரஸாதம் வாங்கிண்டு சீக்கிரம் ஓடிவந்தேன்.'' என்று பரிபூர்ண சந்தோஷத்துடனும் ஆநந்தத்துடனும் கூறினாள். அப்போதுதான் டாக்டரைப் பார்ப்பது போல் பார்த்து "ஓ...டாக்டர் மாமாவா!...எங்காத்துக்கு வரவழி தெரிஞ்சுதா?'' என்று கண்ணைச் சிமிட்டிக்கொண்டே கேட்டாள்.

கோகிலாவின் தெய்வ பக்தியையும் நம்பிக்கையையும் அக்காவிடத்தில் கொண்டுள்ள அளவிடவியலாத ஆழ்ந்த அன்பையும் கண்ட ஹரிநாத்தின் உள்ளம் பூரித்தது. சௌதாமினி ஆவலுடன் எழுந்து "என் கண்மணீ! கோகிலா! என் செல்வமே! உன் புத்திசாலித்தனத்திற்கு என்னவென்று சொல்லுவேன்...மகா பாவி நான் செத்துவிட்டால் உலகம் அஸ்தமித்துவிடுமா! ஐயோ! நான் சாவதற்கு எந்த நிமிடமும் துணிந்திருக்கிறேன். ஆனால் அந்த நிமிடமெல்லாம் உன்னழகிய முகம் என்னைக் கலக்கிவிடுகிறதடீ என் கண்ணே!...கோகிலா! ஈரத்துணியை விலக்கி காய்ந்த வஸ்திரம் கட்டிக்கொண்டு வா!'' என்று உள்ளேயனுப்பினாள்.

சௌதாமினியின் வார்த்தை கிழவர் மனதைத் துளாவியது. ஹரிநாத்தின் உயிரையே அலசியது. எங்கும் மவுனமே குடிகொண்டது. உடனே ஹரிநாத் "தாதா! நான் போய்வருகிறேன். ...சௌதாமினீ! கவலைப்படாதே...கடவுள்கூடக் கைவிடமாட்டார். நான் சென்று கூடிய சீக்கிரத்தில் உன்னை வந்து பார்க்கிறேன்.'' என்றான். இதற்குள் கோகிலா ஓடிவந்து "எம் மாமா! போறங்களா?'' என்றாள். ஹரிநாத் கோகிலாவைக் கட்டியணைத்துத் தடவிக் கொடுத்துப் பின் "ஆமாம்....நான் போய்வருகிறேன். அக்காவுக்கு உடம்பு ஒன்றுமில்லை; பயப்படாதே. எல்லாம் சரியாகிவிடும்'' என்று கூறித் தேற்றிச் சென்றுவிட்டான்.

அன்று முதல் சௌதாமினி வெளியில் வருவதற்கே அஞ்சினாள். அவமானமும் மனக் கலக்கமும் ஒன்று கூடி அவளை குன்றிப் போகும்படிச் செய்துவிட்டன. சில தினங்கள் இவ் வூரை விட்டு

வெளியூருக்குச் சென்றுவிட்டாலும் பரவாயில்லை என்று எண்ணினாள். திடீரென்று எந்த ஊருக்குப் போகலாம்...எங்கு போக்கிடம் இருக்கிறது. சதா வேதனை பிடித்தவளாய் நோயாளியைப் போல் படுத்துவிட்டாள்.

மீண்டும் நான்கைந்து தினங்களாயின. கிழவர் குளிக்கப் போயிருந்தார். சௌதாமினி மட்டும், ஏதோ பத்திரிகை பார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு வேலைக்காரன் பெரிய கவர் ஒன்றை சௌதாமினியினிடம் கொடுத்துவிட்டுச் சென்றான். அதை ஆவலே வடிவாய் பிரித்துப் பார்த்தாள். இவளே ப்ரமித்துத் திடுக்கிடும் வண்ணம் விஷயம் அமைந்திருந்தது. அதாவது:—

"ஸ்ரீமதி சௌதாமினிக்கு!

இக்கடிதம் ஓரளவு உன் கவலையைப் போக்கும் என்ற நம்பிக்கையுடன் இதை நான் துணிந்து எழுதுகிறேன். உன்னுடைய மிகவும் பரிதாபகரமான கோலத்தை என்னால் கண்டு சகிக்க முடியவில்லை யாதலால் எழுதியனுப்புகிறேன். நான் அன்று உன்னைப் பார்த்துவிட்டு வந்த பிறகு என் மனம் என்னை மீறிச் சித்திரவதை அடைந்தது. சமயம் பார்த்து உன் பெரிய டாக்டர் வீட்டிற்கே சென்றேன். உண்மையில் அந்தம்மாள் மிகவும் நல்லவளாயிருப்பினும் அந்த துஷ்ட மூதேவிகளின் தீய விஷமச் செய்கையை மட்டும் கண்டிக்கத் தெரியாமல் அதையே உண்மை என்று நம்பிவிட்டது மிகவும் மதியீனமென்றே நினைக்கிறேன்.

அந்தம்மாள் உன்மீது கொண்ட கோபமும் மாறவில்லை; அன்பும் அடியோடு குறையவில்லை. ஆனால் தான் என்ற கர்வமும் இல்லாமலில்லை. உன்னைத் தள்ளிவிட்ட கொடுமைக்கு உண்மையில் வருந்துவதாகவும் தெரியவில்லை. நீயாக வந்து காலில் விழுந்து மன்றாடி மன்னிப்பு கேட்டால் ஒருகால் மனம் மாறலாம்போலும் தெரிந்தது. ஆனால் அம்மாதிரி செய்ய நீ விரும்பமாட்டாய் என்று நான் நினைக்கிறேன். விரும்புவதும் சரி இல்லை. ஆதலால் நீ தெரிவிக்கவிருந்த முடிவை நானே

தீர்மானித்துக்கொண்டு, நீ தனியே தொழில் செய்யும் உரிமை யுடைய நற்சாக்ஷிப் பத்திரம் கொடுக்கும்படி தந்திரமாகக் கேட்டேன். ஒரு பெரிய கேஸில் அந்தம்மாளும் நானும் ஒன்ருகச் சேர்ந்து பார்க்கவேண்டிய சந்தர்ப்பத்தைக் கடவுள் நேற்று திடீரென்று காட்டி வைத்தார். அச்சமயத்தில் அந்தம்மாளிடமிருந்து நற்சாக்ஷிப் பத்திரத்தை வாங்கி விட்டேன்.

சௌதாமினி! நீ இனி கவலைப்படவேண்டாம். இதோடு அப் பத்திரம் வைத்திருக்கிறேன். இந்த ஜென்மத்தில் என்னுல் செய்யக்கூடிய இச் சிறு உபகாரம் இவ்வளவுதான். எனக்குத் தெரிந்த இடத்திலுள்ள கேஸ்களை உனக்கே அனுப்புகிறேன். பகவான் இருக்கிருன். அவன் பாதத்தை நம்பி உன் தொழிலை நடத்து. தாதாவுக்கு என் நமஸ்காரத்தை தெரிவி. செல்வி கோகிலாவுக்கு என் ஆசீர்வாதம்.

இங்ஙனம்......
ஹரிநாத்''

அதைப் படித்த சௌதாமினிக்கு இன்னதென்று கூறத்திற மற்ற இன்பமும், துன்பமும் ஒருங்கே பொங்கிவிட்டன. அக் கடிதத்தைப் பார்க்கப் பார்க்க அத்தனை அக்ஷரங்களும் அத்தனை ஹரிநாத்போல் தெரிந்து மனத்தைத் துளைத்துக் கலக்கிவிட்டன. ஒரு புறம் சந்தோஷமும், ஒரு புறம் கரை காணுத துயரமும் கூடி விட்டதால் உன்மத்தம் பிடித்தவள்போ லாகிவிட்டாள். கடிதத்தை அணைத்தபடியே உட்கார்ந்துவிட்டாள்.


## அன்பின் சிகரம்

பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது உயிரினுமினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அரு மையை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன?... விலை, அணு. 4

## 10-வது அதிகாரம்

### வருந்திடும் உயிர்கள்—பிரிந்திடும் பறவை

இன்று பொங்கல் புது நாள். எங்கு பார்த்தாலும் ஆரவாரமும், கொம்மாளமுமாக இருக்கின்றன. புதுப் புடவைகளும், பாவாடைகளும் உடுத்தி மகிழும் எண்ணற்ற கூட்டத்தின் பேரானந்தக் காட்சி எல்லோருடைய இதயத்தையும் பரவசமுறச் செய்கிறது. 'ஓங்க வீட்டில் பால் பொங்கிற்று! சம்ப்ரமமா பால் பொங்கிற்று!'...என்ற கேள்வி ஒவ்வொரு க்ரகிணியின் வாயிலும் ஒலிக்கின்றது.

சிறு பெண்கள் எல்லாம் புதுப் பாவாடை உடுத்திப் பூரிக்கின்றனர். அவர்களில் சிலர், அவ் வூரிலுள்ள குடியானவர்களும் மாட்டுக்காரர்களும் ஓர் மரத்தடியில் பொங்கல் வைத்து மாடுகளுக்கு அலங்காரம் செய்து பூசை போடும் வேடிக்கையைக் கண்டு களிக்கின்றார்கள். இந்த கோஷ்டியில் நமது கோகிலாவும் ஒருத்தி. எல்லோரும் புதிய ஆடை உடுத்தி அமர்க்களம் செய்வதையும் தனக்கு மட்டும் பழய ஆடையே இருப்பதையும் பார்த்தால் அவளுக்கு மனதிற்குள்ளே ஒரு மாதிரியான உணர்ச்சி உண்டாகியது.

கூடவிருக்கும் சிறுமிகளும் "ஏண்டீ கோகிலா! நீ புதிய பாவாடை கட்டிக்கல்லே...ஓங்காத்துலெ வாங்கித் தரலேயா?" என்று கேட்பது அவளை இன்னும் வருத்தியது. அச் சிறுமிகள் வீட்டில் பக்ஷணங்கள், சக்கரைப்பொங்கல் எல்லாம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லக் கேட்கும்போது அன்று தங்கள் வீட்டில் அடுப்பே மூட்டாதிருக்கும் மர்மத்தை யறியாது பின்னும் சிறிது விசனமும் ஏக்கமும் உண்டாகியது. மகா புத்திசாலியாகிய கோகிலா தன் வீட்டு விஷயம் ஒன்றமே வெளியிடாமல் அங்கு

நடக்கும் வேடிக்கைகளை மட்டும் பார்த்துக்கொண்டிருந்த பின்னர் வீட்டுக்கு வந்தாள்.

கிழவர் ஒரு புறமும், சௌதாமினி ஒரு புறமும் படுத்திருப்பவர்கள் எழுந்திருக்கவே இல்லை. அவர்கள் முகத்தைப் பார்த்தால் ஏதோ பெரிய பயங்கரமான விசனத்தில் மூழ்கி வருந்திக் கண்ணீர் விடுபவர்களைப் போல் தெரிந்தது...கோகிலாவுக்கு முன்பு தெரிவித்தபடி விசனம் மனத்திலிருந்தபோதிலும், தன் தாதாவையும் அக்காவையும் ஏன் அழுகிறீர்கள் என்று கேட்கவும் பயந்தாள். கேட்க ஆவல் தூண்டிற்றேயன்றி மனத்தில் தைரியம் எழும்பவில்லை.

ஓசை செய்யாமல் வந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். சௌதாமினியின் மார்பைப் பீறிக்கொண்டு வரும் பெரு மூச்சின் சப்தம் இவள் காதில் கேட்கக் கேட்க சிறுமியாயினும் தாங்கவியலாத விசனம் முகத்தில் உண்டாகிவிட்டது. கிழவரின் தேகம் அப்பப்ப! குலுங்குவதும் விம்முவதும் நோக்க முன்னிலும் பன்மடங்கு துக்கம் அபாரமாகப் பொங்குகிறது...கண்ணில் நீரும் நிரம்பிவிட்டது. அதைத் துடைத்துக்கொண்டு சுற்று முற்றும் பார்த்தாள். பச்சிளங் குமரியாகையால் ஒன்றுமே தோன்றவில்லை...

மெல்ல எழுந்து சமையலறைக்குச் சென்றாள். சமயல்காரி அரிசி நோம்பிக்கொண்டிருந்தாள். அவளருகில் கோகிலா சென்று உட்கார்ந்து "ஏம்மா... ...எல்லாராத்திலும் இன்னிக்கு பக்ஷணம், சக்கரைபொங்கல் இன்னும் ஏதேதோ பண்ணி இருக்காளாமே.... நம்பாத்துலே மட்டும் நீ ஏன் ஒன்னுமே பண்ணுமே பழஞ் சாதம் மட்டும் வெச்சியிருக்கே...எல்லாரும் புது புடவையும் பாவாடையும் உடுத்திண்டிருக்காளே......இங்கே ஏன் அக்காவும் தாதாவும் ஒன்னுமே வாங்கல்லே...ஏன் அழுதுண்டே படுத்திருக்கா...என்று கேட்ட கேள்வி அந்த சமயல்காரியின் வயிற்றில் சுறீல் என்று சங்கடம் செய்தது.

இந்த பச்சைக் குழந்தைக்குத் தான் என்ன பதில் கூறுவதென்றே தெரியாமல் திகைத்தாள். கண்ணில் ஜலம் மளமள

வென்று வந்துவிட்டது. அதை கோகிலா கவனிக்காதபடி துடைத்துக்கொண்டு "கோகிலா...பாத்தியா! சொல்ல மறந்தே போய்விட்டேனே...இன்னிக்கு பேஷான ஸினிமா ஒன்னு முழுக்கவும் வேடிக்கைப் படமா வந்திருக்கு அதுக்கு கட்டாயம் ஒன்னெக் கூட்டிக்கொண்டு போரெம்மா...இதோ பாரு. நீ ஓடிப்போய் தலைவாரி, முகங் கழுவி, பொட்டு வைத்துக்கொண்டு வா பாக்கலாம்....என்று தட்டிக்கொடுத்தபடியே கூறி வார்த்தையை மாற்றினதோடு, இதோ பாத்தியா சினிமா பொம்மை...என்று பொம்மையையும் காட்டினுள்.

குழந்தைபுத்தி யாகையினால் படத்தைப் பார்த்ததும் ஞாபகம் அதில் சென்றுவிட்டது. இந்த கதெயெ எனக்கு சொல்லு. இவள் யாரு. இவன் ஏன் இவளைக் குத்த வரான்?...இவன் என்னத்துக்கு அழரான்.... இன்னிக்கு எப்போ போலாம்...அக்காவும் வருவாளேன்னே!" என்று அக்காவைப் பற்றிப் பேச்சு எடுக்கும்போது அக்காவின் பழய ஞாபகம் வந்துவிட்டது...ஏன் அக்கா இன்னிக்கு எழுந்திருக்கவேல்லெ...காத்தாலெ முதல் அழுதுண்டே படுத்திருக்கா?" என்று பழய பல்லவிக்கு வந்துவிட்டாள்.

வேலேக்காரியும் முன்போலவே அதை அப்படியே மறைத்துவிட்டு "இதோ பாரு. இந்த கதையிலெ ஒரு கிழவன் வரானும். அந்த கிழவனுக்கு கல்யாணம் செய்துகொள்ள ஆசையாம்.

கோகி :—ஐயயோ!...கிழவனுக்கா கல்லாணம்....அவன் நம்ப தாதா மாதிரி இருப்பானு....அவனே எந்த கிழவியாவது கல்யாணம் பண்ணிக்குவாளா!....

சமயல் :—இல்லெம்மா! ஒரு சின்ன பொண்ணுதாம்ம...

கோகி :—எங்க அக்கா மாதிரி பொண்ணு!.......எம்மாதிரி பொண்ணு, பக்கத்து வீட்டு லலிதா மாதிரி பொண்ணு!....

சமய :—இதெல்லாம் எனக்கு எப்படி தெரியும்? அங்கே போய் பாத்தால்தானே தெரியும்.

கோகி :—அப்பிடின்னு கிழவனெ சின்ன பொண்ணு கல்யாணம் பண்ணிக்குமா!...அதெக்கூட காட்டுவானு....

சமய :—ஓ! அதெக்கூட காட்டுவான். நீ போய் விளையாடிக் கொண்டிரு. நான் சாயங்காலம் அழைத்துக்கொண்டு போகிறேன்.

கோகி :—அக்காவே...

சமய :—அக்காவுக்கு உடம்பு சரியில்லெம்மா! ராத்திரி எல்லாங்கூட அக்கா தூங்கல்லெ ...

கோகி :—என்ன உடம்பு....என் டாக்டர் மாமாவை கூப்பிடக் கூடாது? அவர் வந்து மருந்து கொடுத்தா தேவலையாயிராதா....... என்ன உடம்பு அக்காவுக்கு, ஜுரமா! நான் போய் பாக்கறேன்.— என்று கூறிக்கொண்டே ஓடினாள். சௌதாமினியின் பக்கத்தில் போய் ஓசை செய்யாமல் நின்றாள். மெல்ல தொட்டுப் பார்த்தாள். இவள் தொட்டுப் பார்த்த அதிர்ச்சியில் சௌதாமினி தலை நிமிர்ந்து பார்த்து கண்களைத் துடைத்தபடியே "கோகிலா...எம்மா! என்ன சமாச்சாரம்?"...என்று கூறியவாறு, அவளை இழுத்து அணைத்துக் கொண்டு மார்புறத் தழுவி முகத்தோடு முகம் பதித்துக்கொண்டாள்.

கோகிலா :—ஏங்கா! ஒனக்கு என்ன ஒடம்பு! ராத்திரி எல்லாம் நீ தூங்கல்லயாமே...என்னக்கா ஒடம்பு ஜொரமா! தலைவலியா? ஏன் டாக்டரிடம் மருந்து சாப்பிடப்படாது...நான் போய் வாங்கிண்டு வரட்டுமாக்கா?...

சௌதா :....ச்ச்ச்ச்...பைத்தியமா இருக்கிறாயே.. எதற்கெடுத்தாலும் டாக்டர் மருந்து எதற்கு? நீ அப்படி எல்லாம் அதிகப்ரசங்கித்தனமாக டாக்டர் வீட்டிற்குப் போகாதே....எனக்கு ஒரு உடம்பும் இல்லை. கொஞ்சம் தலை நோவாயிருந்தது. அதனால் படுத்திருக்கிறேன்....நீ போய் விளையாடு. சாயங்காலம் சினிமாவுக்கு அழைத்துக்கொண்டு போகச் சொல்லுகிறேன்.

கோகிலா :—ஏங்கா! நீ வரமாட்டயா?—நீயும் வாக்கா போய் பாக்கலாம். என்னமோ கிழவனுக்கும் சின்ன பொண்ணுக்கும் கல்யாணமாம். ஏதேதோ சொல்றா சமயக்காரி...நீயும் வாக்கா...

சௌதா :—இதோ பாரு....எனக்கு தலைவலியாகையினால் சினிமா பார்க்க முடியாது. நீ போய் பார்த்துவிட்டு வந்து எனக்

குக் கதை சொல்லு. நான் கேட்டுவிடுகிறேன். வீணாக பிடிவாதம் செய்யாதே ...என்று தேற்றினாள். கோகிலாவும் அதற்குமேல் எதுவுமே பதில் பேசாமல் மெல்ல நழுவி விட்டாள்.

கிழவருக்கு மனம் தத்தளிக்கிறது. இருப்பு கொள்ளவில்லை. மெல்ல தடியூன்றிக்கொண்டு கோயிலுக்காவது சென்று ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு வரலாமென்று போய்விட்டார். சமயல்காரி கோகிலாவை சினிமாவுக்கு அழைத்துக்கொண்டு சென்றாள். சௌதாமினி மட்டும், ஏதோ பயங்கரமான ஓர் பழய காலத்து ரகஸியம் இதயத்தைத் தாக்குகிறதால் அதே வேதனையுடன் படுத்திருக்கையில் முன்பு ஒரு தினம் கேட்டதுபோன்ற அமுத கானம் அந்த அஸ்தமன வேளையில் வெகு ரமணீயமாகக் காதில் விழுந்தவுடனே இவளுடைய அத்தனை மன வேதனையிலும் தன்னையறியாத ஒரு புதிய உணர்ச்சியும், தெம்பும் உண்டாயின. மெல்ல எழுந்து வீதிப் பக்கத்து அறையிலுள்ள ஜன்னலருகில் சென்று உட்கார்ந்து அந்த இனிமையான கானத்தையே கேட்கத் தொடங்கினாள்.

ஊரனந்தம் பெற்ற பேரனந்தஞ் சுற்று
முறவனந்தம் வினையினு
லுடலனந்தஞ்செயும் வினையனந்தங் கருத்
தோவனந்தம் பெற்றபேர்
சீரனந்தஞ் சொர்க்க நரகமுமனந்த நற்
றெய்வமு மனந்த பேதந்
திகழ்கின்ற சமயமு மனந்த மதனால் ஞான
சித் சத்தியாலுணர்ந்து
காரனந்தங்கோடி வருடித்ததென வன்பர்
கண்ணும் விண்ணுந் தேக்கவே
கருதரிய வானந்த மழை பொழியு முகிலைநங்
கடவுளைத் துரிய வடிவைப்
பேரனந்தம் பேசி மறையனந்தஞ் சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவானந்தமாம்
பெரிய பொருளைப் பணிகுவாம்.

—தாயுமானவர்.

183005

PRINTED AT TATA PRESS & PUBLISHED BY
V. M. PARTHASARATHY, MADRAS.

பெருமை

...று நாவல்!

பலவிடங்... க
நடிக்கப்பட்... த!

மனத்தை...
மதியைப்...
மாபெரும் க...னை.

உடனே
படியுங்கள்.

விலை ரூ. 1—4—0

ஈடில்லா
நவீனம்.

!

*

# உத்தமசீலன் அல்லது இரண்டு நண்பர்கள்

*

!

வை. மு. கோ.
எழுதியது.

கவனியுங்கள்:

வஞ்சக நேசம் நஞ்சினும்
மோசம்; சந்தேகப்பேய்
வெந்துயராழ்த்தும்; நல்லறி
வற்றோர் பொல்லாங்குறுவர்;
நன்மை தீமை நன்கறிந்
தோர்க்கே; இம்மை மறுமை
இன்பம் பயக்கும்.

* * *

உங்கள் மனம் கல் அல்ல:
உங்கள் கண்கள் குளமா?
நீங்களே பதில் உணருங்கள்.

நீங்கள் இன்னும் படிக்கவில்லையா?



தலை

வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்

சொஸ்தப்படுத்துகிறது.

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா பம்பாய்